For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஏப்ரல் 2026

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 71

பதிப்பாசிரியர்...

கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

வரலாற்றின் சுவடுகளில் விசுவாசப் பயணம்

'திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்' என்ற உயரிய நோக்கத்துடன் வெளிவரும் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** இதழின் இந்த ஏப்ரல் மாதப் பதிப்பை உங்கள் கைகளில் ஒப்படைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வரலாறு என்பது வெறும் கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல; அது எதிர்காலத்திற்கான வழிகாட்டி. இந்த இதழில் நாம் தமிழகத்திற்கும் விவிலிய உலகிற்குமான ஆழமான மற்றும் பழமையான தொடர்புகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளோம். குறிப்பாக, சாலமோன் மன்னனின் கப்பல்கள் தமிழகத்தின் 'ஓப்பீர்' (Ophir) துறைமுகத்திற்கு வந்து சென்றதும், மயில், துகி (Tuki), கவி (Koph) போன்ற தமிழ் சொற்கள் எபிரேய விவிலியத்தில் இடம்பெற்றுள்ளதும் நம் மண்ணின் தொன்மைக்கும், கடல்சார் வணிகத் திறனுக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

இந்த இதழின் சிறப்பம்சமாக, 'விவிலியமும் தமிழகமும்' என்ற கட்டுரை, நம் கலாச்சாரம் விவிலிய நிலப்பரப்புகளுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும், திருநெல்வேலி திருச்சபை வரலாற்றின் தொடர் கட்டுரையில், 1808-1816 காலகட்டத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சம் மற்றும் காலரா நோய்க்கு மத்தியிலும், இறைப்பணியாளர்கள் எவ்வாறு உறுதியுடன் செயல்பட்டனர் என்பதை விளக்கியுள்ளோம்.

ஏப்ரல் மாதம் என்பது கிறிஸ்து உயிர்த்தெழுந்த வெற்றியைக் கொண்டாடும் மாதம். அந்த வகையில், மிஷனரி ஜார்ஜ் பெட்டிட் அவர்களின் இறுதிச் செய்தியையும், கல்லறை வென்ற கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்குத் தரும் நித்திய நம்பிக்கையையும் இப்பதிப்பில் பதிவிட்டுள்ளோம். மேலும், மிஷனரிகள் ரிச்சர்ட் க்னில் மற்றும் ஜான் தியோபிலஸ் பேரன்புரூக் ஆகியோரின் தியாக வாழ்வு, இன்றைய தலைமுறைக்கு ஒரு பெரிய உந்துதலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வரலாற்றை ஆவணப்படுத்தும் இந்தப் பணிக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் வாசகர்களுக்கும், இறைப்பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழ் உங்கள் விசுவாசப் பயணத்தில் ஒரு புதிய வெளிச்சத்தைத் தரும் என்று நம்புகிறேன்.

'அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.' (மத்தேயு 28:6)

அன்புடன்,

கிறிஸ்துவின் பணியில்,
மன்னா செல்வகுமார்
Manna Selvakkumar

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்
மாத இதழ் 71 | ஏப்ரல் 2026

ஆசிரியர்: மன்னா செல்வகுமார்
வடிவமைப்பு: சுஜித் ரெக்ஸ்
வெளியீடு: கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண்: 2-2-8(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை - 627859,
தென்காசி மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி: 04633 290401, 91767 80001
மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
இணையதளம்: www.christianhistoricalsociety.in

சந்தா விவரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

CHRISTAVA VARALATRU SUVADUGAL
A/c Number : 1748 020000 5614
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

UPI ID: mannaselvakumar@okicici

G Pay

+91 9176780001

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. தனிப்பட்ட சுழற்சிக்கு மட்டும். சந்தா விபரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கும் முறைகள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

--பேசும் பொம்மை ஷாந்தகுமார்--

விவிலியமும், தமிழகமும்!

(வரலாறும், மொழியும் சொல்லும் மறைக்க முடியாத தொடர்புகள்!)

விவிலிய நில பரப்புகளுக்கும், தமிழகத்திற்கும் இடையிலான தொடர்பு என்பது மொழியியல், தொல்லியல், வரலாறு மற்றும் கடல்சார் வணிகச் சான்றுகளால் உறுதிபடுத்தப்பட்ட ஒரு ஆழமான உண்மை.

ஆம்! வணிகப் பாதைகள் வரலாற்றைப் படைத்தன!

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்தின் வளமும், அதன் கடல் வணிகத் திறனும் உலக நாடுகளுடன் இணைப்பை உருவாக்கின. அந்த இணைப்பில், விவிலிய உலகமும் ஒரு முக்கிய பங்காற்றியது என்பது பல்வேறு ஆதாரங்களால் வெளிப்படுகிறது.

1. மொழியியல் சான்றுகள்–சொற்கள் சொல்வது உண்மை

மொழிகள் வெறும் சொற்கள் அல்ல; அவை மறைந்த வரலாறுகளின் உயிருள்ள சாட்சிகள்!

மொழி என்பது ஒரு நாட்டு கலாச்சாரத்தையும், அதன் தொடர்புகளையும் வெளிப்படுத்தும் முக்கிய கருவியாகும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் சில எபிரேயச் சொற்கள், நேரடியாக தமிழோடு தொடர்புடையவை எனப் பல மொழியியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

உதாரணமாக, 1 ராஜாக்கள் 10:22-இல் குறிப்பிடப்படும் ‘மயில்’ எபிரேயத்தில் ‘Tukki’ என்று அழைக்கப்படுகிறது. இது தமிழின் ‘தோகை’ என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் கருதப் படுகிறது.

அதேபோல், ‘யானைத் தந்தம்’ என்பதற்கான ‘Shenhab-bim’ என்ற எபிரேயச் சொல், ‘Shen’ (பல்) மற்றும் ‘Hab’ (தமிழில் ‘இபம்’--யானை) ஆகியவற்றின் சேர்க்கையாக விளக்கப் படுகிறது.

மேலும், ‘குரங்கு’ என்பதற்கான ‘Koph’ என்ற எபிரேயச் சொல் தமிழின் ‘கவி’ அல்லது ‘கபி’ என்ற சொல்லோடு ஒத்துப் போகிறது.

‘அகில்’ மரம் (Agarwood) தொடர்பான சொற்களும் இதே போல் மொழி ஒற்றுமையைக் காட்டுகின்றன.

ஒரு சொல்லின் ஒற்றுமை கூட, சில ஆயிர வருடங்களாக கடந்து வந்த பழமையான உறவை வெளிப்படுத்தும்.

இதனை டாக்டர் ராபர்ட் கால்டுவெல் தனது திராவிட மொழிக் குடும்ப ஆய்வில் குறிப்பிடுகிறார்.

மேலும் எ. சதாசிவம் போன்ற சில ஆய்வாளர்கள், ‘ஊர்’ (Ur) என்ற சொல் சுமேரியத்திலும், தமிழிலும் பயன்படுத்துவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த ‘Ur‘ எனும் ஊரைச் சேர்ந்தவர்தான் ஆபிரகாம் என விவிலியம் பல இடங்களில் (ஆதி. 11:28, 11:31, 15:7 ஆகிய வசனங்களில்) கூறுகிறது.

2. ‘ஓப்பீர்’–தமிழகத்தின் மறைந்த துறைமுகமா?

விவிலியத்தில் குறிப்பிடப்படும் ‘ஓப்பீர்’ (Ophir) என்ற இடம் குறித்து பல நூற்றாண்டுகளாக ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

சாலமோன் மன்னரின் கப்பல்கள் மூன்று

Persian Wheel

Coin of Pandya Kingdom

A terracotta seal with rice husk impression, Keezhadi

ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பீருக்கு சென்று தங்கம், யானைத் தந்தம், மயில், குரங்கு போன்ற விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டு வந்ததாக விவிலியம் கூறுகிறது (1 ராஜாக்கள் 10:22, மற்றும் 2 நாளாகமம் 9:21).

இந்தப் பொருட்கள் அனைத்தும் தமிழகத்தின் முக்கிய ஏற்றுமதி பொருட்களாக இருந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

இதனால், பல வரலாற்று ஆய்வாளர்கள் 'ஒப்பீர்' என்பது தென்னிந்தியாவில் இருந்த ஒரு துறைமுகமாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 'உவரி' அல்லது பழமை வாய்ந்த **'பூம்புகார்'** ஆகிய இடங்கள் இந்த அடையாளத்திற்கு பொருந்தக் கூடியவை என்றும் கூறப்படுகிறது.

மறைதிரு ஜி.யு. போப் மற்றும் மேக்ஸ் முல்லர் போன்ற அறிஞர்கள், விவிலியத்தில் இடம் பெறும் சில பொருட்களின் பெயர்கள் இந்திய வேர்ச் சொற்களுடன் தொடர்புடையவை என்று உறுதிப் படுத்தியுள்ளனர். இது வெறும் ஊகமல்ல; பண்டைய கடல் வணிகத்தின் ஒரு உறுதியான சான்றாகும்.

கடல் பாதைகள் திறந்தபோது, கலாச்சாரங்கள் இணைந்தன!

3. நறுமணப் பாதை

பழங்காலத்தில் 'Spice Route' எனப்படும் 'நறுமணப் பொருட்களின் வணிகப் பாதை' தமிழகத்தில் இருந்து உலகம் முழுவதும் பரவிச் சென்றது என்பது மிகவும் முக்கியமாகப் பார்க்கப் படுகிறது. இம்முயற்சியில் தமிழகமும், அதன் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் பெரும் பங்காற்றின.

விவிலியத்தில் குறிப்பிடப்படும் இலவங்கப் பட்டை (Cinnamon), வசம்பு (Calamus)--(யாத்திராகமம் 30:33), Almug/Algum போன்ற சந்தனப் பொருட்கள் தென்னிந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவையாக இருக்கலாம் என்று பல ஆய்வுகள் கூறுகின்றன.

சாலமோன் மன்னரின் ஆலய கட்டுமானத்திற்கும், அரண்மனை அலங்காரங்களுக்கும் பயன்படுத்தப்பட்ட Almug எனும் மரங்கள் (1 ராஜாக்கள் 10:11-12, மற்றும் 2 நாளாகமம் 9:10-11) , தமிழ்நாட்டின் சந்தன மரங்களாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

4. புனித தோமா–வரலாறு பேசும் சாட்சி

இயேசுவின் 12 சீடர்களில் ஒருவரான புனித தோமா, கி.பி. 52-இல் இந்தியா வந்தார் என்பது கிறிஸ்தவ மரபு மட்டுமல்ல; பல வரலாற்றுச் சான்றுகளாலும் ஊர்ஜிதப் படுத்தப்படுகிறது.

தோமாவின் நடவடிக்கைகள் (Acts of Thomas) எனப்படும் மூன்றாம் நூற்றாண்டு நூல், அவரது இந்தியப் பயணத்தை விவரிக்கிறது. மேலும், மார்க்கோ போலோ போன்ற பயணிகளும் மயிலாப்பூரில் தோமாவின் கல்லறையைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

சென்னையின் பரங்கிமலையில் உள்ள 'தோமா சிலுவை' (Thomas Cross) முக்கியமான தொல்லியல் சான்றாகும். அதில் காணப்படும் பஹ்லவி (Pahlavi) எழுத்துக்கள் பழங்காலத்தைச் சேர்ந்தவை. இது அந்தப் பகுதியின் பழமையான கிறிஸ்தவ மரபை உறுதிப்படுத்துகிறது.

மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் பேராலயத்தில் அவரது கல்லறை அமைந்திருப்பது உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சின்னமாகும்.

5. தொல்லியல் சான்றுகள்–மண்ணில் புதைந்த வரலாறு

மண்ணில் புதைந்து கிடந்த சான்றுகள், மனிதன் மறந்த, மறைத்த வரலாற்றை மீண்டும் எழுப்புகின்றன!

தமிழகத்தின் அரிக்கமேடு, கரூர் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்கள், பண்டைய உலகத்துடன் தமிழகத்தின் வணிகத் தொடர்பை உறுதிப் படுத்துகின்றன.

அகஸ்டஸ் சீசர் காலத்து நாணயங்கள் இங்கு கிடைத்துள்ளன என்பது, அந்தக் காலத்தில் தமிழகத்தின் சர்வதேச வாணிகத்தை வெளிப்படுத்துகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் பிரிட்டிஷ் தொல்பொருள் ஆய்வாளர், சர் லியோனார்ட் வூலி (Sir Leonard Woolley) என்பவர் மெசபடோமியாவின் புகழ்பெற்ற உர் (Ur) நகரத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார்.

சுமார் பிசி 2600-இல் அங்குள்ள அரச குடும்பத்தினரின் புதைக்கப் பட்ட கல்லறைகளில் (Royal Cemetery of Ur) பளபளப்பான சிவப்பு நிற கார்னிலியன் (Carnelian) மணிகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த மணிகள் சிந்து சமவெளி நாகரிகம் (Indus Valley Civilization), மற்றும் தென்னிந்திய கைவினைஞர்களால்

உருவாக்கப்பட்டவை என்பது தொல்லியல் ஆய்வுகளால் உறுதிபடுத்தப் பட்டுள்ளது.

மேலும், 2014-ஆம் ஆண்டு வெளியான 'PLOS ONE' இதழில், எம்.ஜி. பழனிச்சாமி அவர்கள் ஒரு முக்கியமான ஆய்வை வெளியிட்டார். அந்த ஆய்வு என்ன சொல்கிறது?

'Terqa' (இன்றைய Tell Ashara, Syria) என்ற பகுதியில், கி.மு. 2500 முதல் கி.பி. 500 வரை வாழ்ந்த மக்களின் எலும்புக் கூடுகள் (skeletal remains) ஆய்வு செய்யப்பட்டன. அந்த எலும்புகளிலிருந்து மைட்டோகாண்ட்ரியல் டி.என்.ஏ (mtDNA) என்ற மரபணு தகவல்கள் எடுக்கப்பட்டன. (mtDNA என்பது, நம்முடைய உடலில் உள்ள ஒரு சிறிய மரபணு பகுதி. இது பெரும்பாலும் தாய்வழியாக பரவுகிறது!)

A Chera coin with bow and arrow, and an elephant goad on the obverse and elephant on the reverse

Chola Coins with a tiger on the obverse, elephant and the sacred symbols on the reverse

Sangam Age Pandya coin with fish symbol

மனிதர்களை மரபணு அடிப்படையில் பிரிக்க ஒரு முறை உள்ளது. அதற்கு 'ஹாப்லோகுரூப்' (Haplogroup) என்று சொல்வார்கள். அதாவது, ஒரே மூதாதையரைப் பகிர்ந்து கொள்ளும் மரபணுக் குழு அந்த ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டது:

'65a1' என்ற 'ஹாப்லோகுரூப்' அந்த சிரியா பகுதி பழங்கால மனிதர்களிடம் இருந்தது. அதே 65a1 மரபணு வகை, இன்றும் தமிழ்நாடு மாநிலத்தில் குறிப்பாக திண்டுக்கல் மற்றும் தென் மாவட்டங்களில் காணப்படுகிறது.

இதன் மூலம், பழங்காலத்தில் தமிழர்கள் மெசோபோடாமியா பகுதிகளுடன் தொடர்பில் இருந்தது ஊர்ஜிதமாகிறது!

முடிவுரை

தமிழகத்தின் மிளகு, முத்து, மயில் தோகை, சந்தனம் போன்ற இயற்கை வளங்கள், பண்டைய உலகின் அரசவைகளில் முக்கிய இடம் பெற்றன. அவற்றின் தடங்கள் விவிலியத்திலும் பதிந்துள்ளன என்பது சுவாரஸ்யமான உண்மை.

இந்தத் தொடர்புகள் தமிழரின் கடல்சார் திறமை, வணிக அறிவு மற்றும் உலகளாவிய தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

பழைய ஏற்பாட்டில் உள்ள சில விவரங்களால் அக்கால தமிழக வணிகத்திற்கு கிடைத்தது நல்ல பேரு; புதிய ஏற்பாட்டுத் தோமா மூலம் கிறித்தவம் ஐரோப்பாவுக்கு முன்பே தமிழகத்தில் தோன்றியதால் தமிழ்நாட்டுக்கு கிடைத்தது பெரும் பேறு!

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு-17

திருமதி. ரெமினா சுஜித்

திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு – பகுதி 17

முந்தைய அத்தியாயத்தில், மிஷனரி ரிங்கல்தெளபே திருநெல்வேலி மற்றும் திருவிதாங்கூர் பகுதிகளில் ஆற்றிய ஊழியத்தின் இறுதி நாட்களையும், அவர் விட்டுச்சென்ற அழியாத முத்திரையையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த மாதக் கட்டுரையில், அவர் சென்றபின் 1808 முதல் 1816 வரையிலான காலகட்டத்தில் திருநெல்வேலி திருச்சபை சந்தித்த பெரும் சவால்கள், கொடிய காய்ச்சல், பஞ்சத்தின் பிடியில் மக்கள் பட்ட பாடுகள் மற்றும் புதிய போதகர்களின் வருகை குறித்த வரலாற்றுப் பதிவுகளைக் காண்போம்.

திருநெல்வேலியில் ரிங்கல்தெளபேயின் பணி குறுகிய காலமாக இருந்தாலும், அவரது நினைவுகள் அங்கும், அவரது முக்கியப் பணித்தளமான தென் திருவிதாங்கூரிலும் நிலைத்து நிற்கின்றன. அவர் வறுமையையோ அல்லது சந்நியாசத்தையோ நேரடியான ஆவிக்குரிய மதிப்பாகக் கருதவில்லை என்ற ஒரு முக்கியமான விஷயத்தைத் தவிர்த்துப் பார்த்தால், அவரை **'முதல் புராட்டஸ்டன்ட் மிஷனரி சாது'** என்று நியாயமாக வர்ணிக்கலாம். வாழ்வதற்கு ஒரு சிறிய குடிசை, உண்பதற்குக் கிராமத்து உணவு ஆகியவை மட்டுமே அவரது தேவைகளுக்குப் போதுமானதாக இருந்தன. பயணம் செய்யும் போது தவிர மற்ற நேரங்களில் அவர் தன் முதுகில் ஒரு கோட் அணிவது அபூர்வம் (கர்னல் ட்ரொட்டர் (Col. Trotter) கொடுத்த ஒரு கோட் மற்றும் ஓரிரு உடைகள் மட்டுமே அவரிடம் இருந்தன). தனது சம்பளத்தை அவர் பனை ஓலைகளுக்காகவோ அல்லது சுவிசேஷகர்களுக்காகவோ செலவிட்டார்.

இரட்சகர் இயேசு கிறிஸ்து மீது ஆழ்ந்த தனிப்பட்ட பக்தி கொண்டவராகவும், கண்கூடாக ஜெப ஆவியோடும் வாழ்ந்த இந்த வாழ்க்கை இந்தியர்களால் மிகவும் மதிக்கப்பட்டது மற்றும் ரசிக்கப்பட்டது. இருப்பினும், ஆங்கிலேயர்கள் அவரது அர்ப்பணிப்பையும் பக்தியையும் ஏற்றுக்கொண்டாலும், அவரை ஒரு வித்தியாசமான மனிதராகவே (eccentric) கருதினர். ஹஃப் (Mr. Hough) என்பவர் தனது 'இந்தியாவில் கிறிஸ்தவத்தின் வரலாறு' (தொகுதி IV, ப. 284, கால்டுவெல் நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது, ப. 166f) என்ற நூலில் அவரது குணாதிசயங்களைப் பற்றி சற்றுக் குறைவான மதிப்பீட்டையே (depreciatory view) அளித்துள்ளார். ரிங்கல்தெளபேயை நன்கு அறிந்த சில மிஷனரிகளும் மற்றவர்களும், அவரது செயல் திட்டங்கள், அவரது நாட்குறிப்புகள் மற்றும் L.M.S.-உடனான அவரது கடிதப் பரிமாற்றங்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, அவர் முற்றிலும் தீவிரமான, வழக்கத்திற்கு மாறான சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடியவர் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

வரலாற்றுப் பதிவுகளின் பற்றாக்குறை (1808 – 1816):

1808 முதல் 1816 வரையிலான ஆண்டுகளில் திருநெல்வேலி மிஷனரிப் பணிகள் குறித்து மிகக்

குறைவான தகவல்களே நமக்குக் கிடைக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மிஷனரிகளின் அறிக்கைகள் மற்றும் கடிதங்கள் அடங்கிய 'நியூ கெஷிச்டே' (Neue Geschichte) என்ற வெளியீட்டிற்குத் தகவல்கள் செல்லாததே ஆகும்; முந்தைய அத்தியாயங்களில் நாம் அதிலிருந்தே பல தகவல்களை மேற்கோள் காட்டியுள்ளோம். இதன் ஆசிரியர்களால் 1808 முதல் 1815 வரை எந்தப் புதிய பகுதிகளையும் வெளியிட முடியவில்லை. ஐரோப்பாவில் நடந்த போர் காரணமாகப் பல ஆண்டுகளாகத் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதும் இதற்குக் காரணம் என்றும், மிஷனரிகள் அனுப்பியதாகக் கூறப்படும் பல நாட்குறிப்புகளும் அறிக்கைகளும் தங்களுக்கு வந்து சேரவில்லை என்றும் 1815-ல் அவர்கள் விளக்கமளித்தனர்.

இருப்பினும், அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த சில நாட்குறிப்புகள் மற்றும் கடிதங்கள் இறுதியில் 'நியூ கெஷிச்டே'-வில் வெளியிடப்பட்டன, மேலும் சில தகவல்கள் S.P.C.K. கிழக்கு இந்திய மிஷன் குழுவின் அறிக்கைகளிலும் காணப்படுகின்றன. ஆனால் திருநெல்வேலியைப் பற்றிய தகவல்கள் குறைவாக இருப்பதற்குப் பெரிய காரணம் என்னவென்றால், அங்குள்ள திருச்சபையின் வாழ்வு குறித்து மிஷனரிகளால் அறிக்கை அளிக்க ஏதுமில்லாமல் இருந்ததுதான். இந்தக் காலகட்டத்தில் எந்த மிஷனரியும் திருநெல்வேலிக்கு வரவில்லை; 1810-ல் சத்தியநாதன் ஒரு குறுகிய பயணம் மட்டுமே மேற்கொண்டார்; மேலும் இந்தக் காலகட்டத்தின் கடைசி இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் மட்டுமே ஒரு இந்திய குருவானவர்கள் அந்த மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்டார்.

இந்திய குருவானவர்களின் அபிஷேகம் (1811):

இந்தக் காலகட்டத்தில் போலே (Pohle) திருச்சியிலும், கோல்ஹாஃப் (Kohlhoff) தஞ்சாவூரிலும் 'ஆங்கில மிஷனரிகளாகப்' பணியாற்றினர். கெரிக்கே (Gericke) என்பவருடன் பதினொரு ஆண்டுகள் வேப்பேரியில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய ஹார்ஸ்ட் (Horst) என்பவர், 1806-ல் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டு, தஞ்சாவூரில் கோல்ஹாஃபுடன் இணைந்தார், ஆனால் அவர் 1810-ல் இறந்துவிட்டார். இந்திய குருவானவர்களின் தேவையை அவர்கள் கடுமையாக உணர்ந்தனர். 1807-ல் சில உபதேசியர்களை குருவானவர்களாக அபிஷேகம் செய்ய அவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், 'இந்திய மத சமூகமும் மிஷனரிகளும் பெரிதும் விரும்பிய, முறையான திருச்சபை அமைப்பு (regular Church Establishment) நிறுவப்படும் வரை, அதாவது அதிக அதிகாரத்துடனும் முறையான ஒழுங்குடனும் அபிஷேகங்கள் செய்யப்படக்கூடிய ஒரு சாதகமான காலம் வரும் வரை இதனை ஒத்திவைப்பதே விவேகமானது என்று கருதப்பட்டது' என்று நமக்குக் கூறப்படுகிறது.

இருப்பினும், இந்தியாவில் ஒரு ஆங்கிலிகன் பிஷப் ஆட்சி (Anglican episcopate) உருவாகும் என்ற இந்த எதிர்பார்ப்பு முன்கூட்டியே கணிக்கப்பட்ட ஒன்றாகும். 1810-ல் S.P.C.K., தென்னிந்திய மிஷன்களில் சிரியன் குருக்கள் பணியமர்த்த முடியுமா என்று தங்கள் மிஷனரிகளிடம் கேட்டது. இதற்குப் பதிலளித்த கோல்ஹாஃப் மற்றும் ஹார்ஸ்ட், அந்த குருவானவர்கள் முப்பத்தொன்பது வேத சித்தாந்த பிரமாணங்கள் (Thirty-nine Articles), அகஸ்டன் பாவ அறிக்கை (Augustan Confession), நிசேயா விசுவாசப் பிரமாணத்திற்கும் (Nicene Creed) எதிரான உபதேசங்களைக் கொண்டிருப்பதால், அவர்களுடன் இணைவதை நிராகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக ஒரு குறிப்பாணை மூலம் தெரிவித்தனர். போலேயும் இதை ஒப்புக்கொண்டார், ஆனால் அவர்களின் மொழியை அறிந்த ஒருவர் ஓரிரு ஆண்டுகள் அவர்களுடன் தங்கியிருந்தால், சிரியர்களின் தற்போதைய நிலைமையை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும் என்று பரிந்துரைத்தார்.

இறுதியாக, இனியும் காத்திருக்க முடியாது என்று மிஷனரிகள் முடிவு செய்தனர். S.P.C.K.-யும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காததால், போலும், கோல்ஹாஃபும் மற்றும் சத்தியநாதனும் சேர்ந்து 1811 மார்ச் 17 அன்று திருச்சியில் ஞானப்பிரகாசம், அடைக்கலம், வேதநாயகம் மற்றும் ஆபிரகாம் ஆகிய நான்கு உபதேசியர்களைப் குருவானவர்களாக அபிஷேகம் செய்தனர். திருநெல்வேலி சபைகளைக் கவனித்துக்கொள்ள வேதநாயகம் உடனடியாகப் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டார்.

கொடிய காய்ச்சலும் திருச்சபையின் பாதிப்பும் (1811 – 1813):

எனினும், அங்கு அவரது பணி மிகக் குறுகிய காலமே நீடித்தது. அப்போது அங்குப் பரவிய கொடிய காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 1813-ல் அவர் பாளையங்கோட்டையில் இறந்தார். அவருக்குப் பதிலாக ஆபிரகாம் அனுப்பப்பட்டார், அவரும் கடுமையாக நோய்வாய்ப்பட்டுத் தஞ்சாவூருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று, மேலும் 1815 அல்லது 1816 வரை அவரால் மீண்டும் திருநெல்வேலிக்குச் செல்ல முடியவில்லை.

உண்மையில், 1811 முதல் 1813 வரை திருநெல்வேலி, மதுரை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் மிகக் கொடிய காய்ச்சல் (epidemic of fever) பரவியது. 1810-ன் இறுதியில் கடும் மழையும் பெரு வெள்ளமும் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அடுத்த பிப்ரவரியில் தொடர்ந்து பத்து நாட்கள் கனமழை பெய்தது. மேலும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலும் பெரிய அளவில் மழை பெய்தது. பொதுவாகச் சில லேசான சாரல்கள் அல்லது லேசான இடியுடன் கூடிய மழை மட்டுமே பெய்யக்கூடிய அந்தப் பருவத்தில் இது

மிகவும் அசாதாரணமானதாகும். இதனால் ஏற்பட்ட காய்ச்சல், அநேகமாக மிகவும் கடுமையான மலேரியாவாக இருக்கலாம், இது மேற்கு மலைத்தொடர்களில் இருந்து தொடங்கி மாவட்டம் முழுவதும் பரவியது.

இந்தக் காய்ச்சல் மிகவும் வீரியம் மிக்கதாக இருந்தது, இதனால் தாக்கப்பட்ட பலர் மூன்றே நாட்களில் இறந்தனர். இறப்பு விகிதம் பயங்கரமாக இருந்தது; சில இடங்களில் மக்கள் தொகையில் பாதிப் பேர் இறந்துவிட்டதாகக் கூறப்பட்டது. இழப்பு மற்றும் வெள்ளத்தின் பாதிப்புகள் இணைந்து விரைவில் பஞ்சத்தைக் கொண்டுவந்தன. டிசம்பர் 1812 முதல் பிப்ரவரி 1813 வரையிலான மூன்று மாதங்களில் ராமநாதபுரம் நகரில் ஆறு பேரில் ஒருவர் இறந்ததாகக் கூறப்படுகிறது. பஞ்சத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் தென் மாவட்டங்களில் இருந்து திருச்சிராப்பள்ளியின் சுற்றுப்புறங்களுக்குத் தப்பி ஓடிவிட்டதாகப் போலும் அறிக்கை அளித்தார். 1811 மே மாதத்தில் அதிகாரிகளால் ஒரு மருத்துவக் குழு கூட்டப்பட்டது, ஆனால் அவர்கள் அளித்த பரிந்துரைகளான கட்டில்களில் தூங்க வேண்டும், கதகதப்பான ஆடைகளை அணிய வேண்டும், நல்ல உணவை உண்ண வேண்டும் என்பன போன்ற அறிவுரைகள், பயிர்களை இழந்து ஏற்கனவே பாதிப் பட்டினியில் கிடந்த கிராமவாசிகளுக்குப் பெரிய அளவில் நடைமுறைக்கு ஒவ்வாததாகவே இருந்தன.

1811 ஆகஸ்டில் வேதநாயகம் அவர் இறப்பதற்கு முன்பதாக கோல்ஹாஃபுக்கு எழுதிய கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தத் தொற்று காய்ச்சலால் ஏற்கனவே 20,000-க்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டதாகவும், காய்ச்சலுடன் சேர்ந்து திருநெல்வேலி மாகாணத்தின் பிற மாவட்ட மக்கள் விலக்களிக்கப்பட்ட சில கூடுதல் வரிகளும் கட்டாயமாக்கப்பட்டதால், அவரது மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களும் வெவ்வேறு இடங்களுக்குச் சிதறிச் சென்று, புறஜாதிகளின் மற்ற கிராமங்களில் குடியேற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கையாலும், பலரின் பின்வாங்குதலினாலும் திருநெல்வேலியில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்தது.

காய்ச்சல் காரணமாகத் திண்டுக்கல் அல்லது மதுரை பற்றி எந்த அறிக்கையும் தர முடியவில்லை என்று 1812-ல் மிஷனரிகளின் கடிதம் ஒன்று கூறுகிறது. இது மக்களின் கிறிஸ்தவ ஒழுக்கத்தைக் கடுமையாகப் பாதித்திருந்தது, மேலும் கிறிஸ்தவர்கள் துரதிர்ஷ்டவசமாக மற்றவர்களுக்கு மோசமான முன்னுதாரணமாக இருந்தனர். 1813-ல் இந்தக் காய்ச்சல் தொடர்ந்து அந்த மாவட்டங்களில் கோரத்தாண்டவம் ஆடியதால் அங்கு எந்த உபதேசியாரையும் கிறிஸ்துவின் பணிக்காக அனுப்ப முடியவில்லை என்று அவர்கள் மீண்டும் அறிக்கை அளித்தனர்; இருப்பினும் 1814-ன் தொடக்கத்தில் மக்கள் மீண்டும் திண்டுக்கல் மற்றும் மதுரையில் குடியேறத் தொடங்கியுள்ளனர் என்றும், அங்குச் சிறிய காவல் படைகள் நிறுத்தப்பட்டுள்ளதால், விரைவில் மிஷனைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அங்கு வாழ்வார்கள் என்று தாங்கள் நம்புவதாகவும் அவர்கள் எழுத முடிந்தது. இது உண்மையில் விரைவில் நடந்தது, 1815-ன் இறுதியில் மதுரை மற்றும் திண்டுக்கல்லில் 52 கிறிஸ்தவர்கள் இருந்தனர். சிவகங்கையில் உள்ள சிறிய சபை சமீபத்தில் கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளதாகவும், அங்கு ஒரு தேவாலயம் கட்ட தான் விரும்புவதாகவும், ஆனால் ஒரு துண்டு நிலம் கூடக் கிடைக்கவில்லை என்றும் கோல்ஹாஃப் 1814-ல் எழுதினார்.

1816-ஆம் ஆண்டில், கல்கத்தாவின் முதல் பிஷப்பாக 1814 நவம்பரில் வந்தடைந்த பிஷப் மிடில்டன் (Bishop Middleton), கொச்சி செல்லும் வழியில் திருநெல்வேலியைக் கடந்து சென்றார், மேலும் பாளையங்கோட்டை சபையை அவர் ஒரு கணம் பார்வையிட்டார். மார்ச் 22, 1816 தேதியிட்ட ஒரு கடிதத்தில் அவர் எழுதுகிறார்:

'தென்னிந்தியாவில் உள்ள திருநெல்வேலியின் தலைநகரான பாளையங்கோட்டையிலிருந்து நான் எழுதுகிறேன் என்பதை நீங்கள் கவனிப்பீர்கள். அதன் தென்கோடியான கன்னியாகுமரி (அல்லது கடலில் இருந்து இருபது மைல் தொலைவில் இருந்தாலும் மாலுமிகளின் அடையாளமாக விளங்கும் பிரம்மாண்டமான மலை, அது தவறாக முனையம் என்று அழைக்கப்படுகிறது) - நான் இப்போது எழுதிக் கொண்டிருக்கும் ஜன்னலிலிருந்து வெறும் நாற்பது மைல் தொலைவில் அதன் உயர்ந்த மலையுச்சியைக் கண்முன் காட்டுகிறது. இன்னும் சில நாட்களில், திருவிதாங்கூர் செல்லும் வழியில் நான் அதன் மிக அருகில் செல்லப் போகிறேன், மேலும் கொச்சியில் (பத்திரிகைகள் எனக்குத் தெரிவிப்பது போல, பிஷப்பை அந்த மாகாணத்திற்குக் கொண்டு செல்ல பம்பாயில் இருந்து ஒரு கப்பல் புறப்பட்டுள்ளது), நான் மீண்டும் கடலில் பயணம் செய்யப் போகிறேன்.'

'நேற்றைய மாலைப் பொழுதில் நடந்த ஒரு நிகழ்வை விட சுவாரஸ்யமான ஒன்றை எனது பயணத்தில் நான் சந்தித்திருக்க வாய்ப்பில்லை. நான் இந்த இடத்திலிருந்து சில மைல் தொலைவில் முகாமிட்டிருந்தேன் (ஏனெனில் நாங்கள் கூடாரங்களில் வசிப்பவர்கள், பல நாட்களாகச் சில உள்ளூர் குடிசைகளைத் தவிரச் சிறந்த எதையும் நாங்கள் பார்ப்பதில்லை); இரவு உணவை முடித்து எழுந்ததும், பல நபர்கள் தங்கள் மரியாதையைச் செலுத்தக் காத்திருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் வெளியே சென்றேன்,

ஒவ்வொரு கட்டத்திலும் வழக்கம் போல, தரோகா (Darogah) எனப்படும் நூறு கிராமங்களுக்குப் பொறுப்பான ஒரு வகையான தலைமைக் காவலர், தனது அனைத்துப் பின்பற்றுபவர்களுடனும் வந்து பழங்கள் போன்றவற்றைக் கொடுத்து மரியாதை செலுத்தினார். நான் அவர்களை அனுப்பி வைத்ததும், மற்றொரு குழு வந்தது, அவர்களைச் சந்திக்க நான் அவ்வளவாகத் தயாராக இல்லை.

அவர்கள் திருநெல்வேலி கோயில்களைச் சேர்ந்த முப்பது அல்லது நாற்பது பிராமணர்கள் கொண்ட ஒரு குழுவினர். அவர்களும் பிஷப்பிற்கு மரியாதை செலுத்தவே வந்திருந்தனர், மேலும் அரசாங்கம் தங்களின் கோயில் நிலங்களின் விளைச்சலில் இருந்து மிகக் குறைவான தொகையையே தங்களுக்கு வழங்குவதாகவும், இதனால் அவர்களும் அவர்கள் மதமும் பட்டினியால் சாகும் அபாயத்தில் இருப்பதாகவும் முறையிட்டனர்; மேலும் இது சார்பாக நான் தலையிட வேண்டும் என்று மிகவும் இயல்பாகவே அவர்கள் என்னை எதிர்பார்த்தனர்! இதைப் புரிந்துகொள்ள நீங்கள் ஒன்றை அறிய வேண்டும், அரசாங்கம் இங்கே ஒரு வகையான நிலச் சுவான்தாரர்களாக (lay-impropriators) செயல்படுகிறது. அவர்கள் கோயில் நிலங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, கடமைகளைச் செய்வதற்கும் சடங்குகளின் செலவுகளுக்கும்

எது நியாயமானது என்று நினைக்கிறார்களோ அதை வருமானத்திலிருந்து வழங்குகிறார்கள்; அந்த வகையில் அது தங்களுக்குப் போதாது என்று இந்தப் பிராமணர்கள் கூறுகிறார்கள். இந்தக் கேள்வி முற்றிலும் எனது அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது; ஆனால் கம்பெனியின் ஊழியர்கள் இதுபோன்ற நோக்கங்களுக்காக அரசாங்கம் வழங்கும் சலுகைகள் மிகவும் தாராளமானவை என்றே எனக்குப் பொதுவாக உறுதியளிக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஆனால், மகிழ்ச்சியான பகுதி இனிமேல்தான் வரவிருக்கிறது...'

1808 முதல் 1816 வரையிலான காலகட்டம் திருநெல்வேலி திருச்சபைக்கு ஒரு கடுமையான சோதனைக் காலமாகவே அமைந்தது ஆனாலும் உபதேசியார்களும் குருவானவர்களும் மிஷனெரிகளும் கிறிஸ்துவுக்காக உழைத்தார்கள். முறையான ஐரோப்பிய மிஷனரிகள் இல்லாத நிலை, கொடிய காய்ச்சல், பஞ்சம் எனப் பல வழிகளில் திருச்சபை உபத்திரவங்களைச் சந்தித்தது. ஆயினும், தேவன் தம்முடைய மந்தையை முற்றிலுமாகக் கைவிடவில்லை. பிஷப் மிடில்டனின் வருகையும், அடுத்தடுத்து குருவானவர்கள், உபதேசியார்கள் மற்றும் மிஷனரிகள் எடுத்த முயற்சிகளும் இருண்ட சூழ்நிலையிலும் ஒரு நம்பிக்கையின் ஒளியைக் கொண்டுவந்தன. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, கிறிஸ்துவின் பாதையில் துன்பங்கள் வந்தபோது, பலர் பின்வாங்கினர். ஆனால் கிறிஸ்துவுக்குள் விசுவாசமாக இருந்தவர்கள் மட்டுமே நிலைத்திருந்தார்கள். எப்படிப்பட்ட இன்னல் வந்தாலும், கிறிஸ்துவை விட்டு விலகாதவர்களாக நாம் வாழ வேண்டும்.

பிஷப் மிடில்டன் சந்தித்த நிகழ்வுகள் என்ன? அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி திருச்சபையின் அடுத்தகட்டப் பயணம் எவ்வாறு அமைந்தது? உபத்திரவங்களுக்குப் பின் தேவன் எப்படித் தம்முடைய சபையை மீட்டெடுத்தார்? என்பதை அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

'நோயும் பஞ்சமும் சூழ்ந்து மந்தை சிதறினாலும்,
மேய்ப்பனில்லா வேளையிலும் நல்ல மேய்ப்பன் சபையைத் தாங்கினாரே!
கடும் சோதனைகளைக் கடந்து, புதிய எழுச்சி விரைவில் மலர்ந்ததே!'

CHRISTIAN HISTORICAL SOCIETY (CHS)
Membership Application Form
SCAN TO APPLY
(Join as a Member – Google Form)
Fill out this Google Form to join the Christian Historical Society as a member.
Christian Historical Society (CHS)
No. 99/14 & 99/15,
ASAR Campus, Aladipatti Road,
Surandai – 627859,
Temkasi District, Tamil Nadu.
+91 91767 80001
christianhistorical@gmail.com
www.christianhistoricalsociety.in

Christian Historical Society
CHRISTAVA VARALATRU SUVADUGAL
Membership Application Form
Monthly Research Journal
Preserving hidden, forgotten, and neglected pages of Christian history
Published continuously every month since June 2020
SCAN TO APPLY
This membership form can be
Shared digitally ✓ Printed for submission
Contact Us
Christian Historical Library & Museum
Surandai – 627859, Tamil Nadu, India
+91 90420 15221

ஓடிப் போனவன்-19

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர்

'ஏப்புள்ள' நம்ம முத்து பட்டணத்துக்குப் போன பெறவு நம்ம ஊரே வெறிச்சோடி போச்சி பாத்தியா?'

'ஆமாக்கா' அவன் வரவும் விசயராமபொரமே ஒரு தனி அழகா மாறிச்சி' எனுமேல் எப்ப வருவானோ தெரியல' ஆனா கண்டிப்பா வந்திருவான்னு எனக்கு தோணுது'எப்படியும் வருவேன்னு சொல்லிட்டு போயிருக்கான்'

'நம்ம முத்தரசி கல்யாணத்துக்கு அவனைத்தான் தாலியெடுத்து கொடுக்க அவள் ஐயன் கேட்டிருக்காரு' முத்து முடிஞ்சவரை கல்யாணத்துக்கு வந்திருவேன்னு சொன்னதை நான் கேட்டேன்''

'அப்படியா' அவ கல்யாணத்துக்கு என்னும் எத்தனை நாள் கெடக்கு புள்ள?'

'அடுத்த வாரம்' எட்டு நாளு கெடக்கு''

'முத்தரசி தமையன் ஒரே குடியா குடிச்சிட்டு கெடந்தவன்' முத்து வந்து புத்தி சொன்ன பெறவு அந்த குடியையே விட்டுட்டு இப்ப பனையேற போறானாம்'அவன்பொண்டாட்டி ராசம்ம சொன்னா'

'இடிஞ்சி கெடந்த வீட்டை முத்து எடுத்து நிறுத்திட்டான்னு அவிய குடும்பமே பேசிகிட்டாவ'' 'தெனமும் முட்டாங்கால்ல நின்னு. சாமி கும்புடுதாவக்கா'' 'எனக்குமே' முத்து கும்புடுத சாமியை புடிச்சிருக்கு''

'ஆமா புள்ள' யாருக்குதான் புடிக்காது'ஆனா'' அவள் குரல் சற்று தாழ்ந்தது. 'நம்ம கண்ணையன் வீட்டு பையலுவளுக்கு இப்படி நாம எல்லோரும் முத்து வீட்டுக்கு போய் சாமி கும்பிட போனது புடிக்கல''

'நேத்துங்கூட எனும அவனை இந்த ஊருக்குள்ள உடக்கூடாதுன்னு வடக்கூரு காரன் ராமையாக்கிட்ட சொல்லிகிட்டு இருந்தான்''

'ஆமா' ஆமா' இந்த ஊருக்குள்ளயே களவாணி பய குடும்பம்தான அது' முத்து கிட்ட நல்லாதான் பேசிகிட்டானுவ' ஆனாலும் அவனை பிடிக்கல'எப்படி பேசுதானுவ பாரேன்!'

'அது எதுக்குன்னு நெனைக்கா நீ'? இவந்தான ஊருக்குள்ள வேண்டாத ஞாயமெல்லாம் பேசிகிட்டு திரிவான்'இப்போ எல்லாரும் 'முத்து' 'முத்து'ன்னு சொல்லுதாவல்லா' அந்தப் பொறாமை''

'நம்மள எல்லாரும் இனிமே மதியாம அவம்பின்னால பொய்ருவாவளோன்னு நெனைக்கானுவ''

'சரி சரி' அன்னா வாரது முத்துவோட தமைக்காதானே?' 'எக்கோ' என்ன ஒரே பேச்சா பேசிகிட்டே

வாரிய?'

'வேற யார பத்தி பேச இருக்குளா?' உன் ஒடப்பிறந்தானைப் பத்திதான்' முத்து எனுமேல் என்னைக்குளா நம்மூருக்கு வருவான்'?'

'தெரியலக்கா' ஆனா வருவான்' சீக்கிரமே வந்திருவான்னு எனக்கு தோணுது' நேத்து ராத்திரி எங்கனவுல முத்து நம்ம வீட்டையே பார்த்துக்கிட்டு எங்கேயோ நின்னுகிட்டு இருக்க மாதிரி பாத்தேன்"

'அவனும் நம்மளையே தான் நெனைச்சிகிட்டு இருக்கான்"

அந்தப் பேச்சுக்கள் காற்றோடு கலந்து ஊரெங்கும் பரவிக் கொண்டிருந்தன. அதே நேரம் ஊரின் எல்லை வழியாக, குளத்தங்கரையின் மேலே இரண்டுபேர் நடந்துவந்தனர். முன்னால் தாவீது. பின்னால் சத்தியநாதன். இருவரும் ஒரே மாதிரியான ஆடை அணிந்திருந்தனர். முத்து முதல் நாள் ஊருக்குள் வரும் போது அணிந்திருந்த மாதிரியான ஆடை. ஊரின் மண் வாசனை சத்திய நாதனுக்குப் புது மணமாக இருந்தது. எங்கு திரும்பினாலும் வேப்ப மரங்களும் பூவரசம் மரங்களாகவும் தெரிந்தது. வெயிலின் தாக்கத்தை மரங்கள் இதமாக விரட்டிக் கொண்டிருந்தன. தோட்டத்தில் கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்க்கும் சத்தம் கேட்டு அப்படியே நின்று விட்டார் சத்திய நாதன். அந்த இயற்கை அழகு அவரது உள்ளத்தை ஆழமாகத் தொட்டது. வீட்டை நோக்கியே விரைந்து கொண்டிருந்த தாவீது நடையை மெதுவாக்கினான்.

ஓ. . . . கமலை இறைக்கதை பார்த்து நிற்கின்றீர்களா? அது எனது மாமன் கிணறுதான்.

'அப்படியா, கமலை இறப்பது உனது மாமனா?'

'இல்லை. அது தோட்டத்தில் வேலை செய்யும் உதவி ஆள் ஐயா. பெயர் பேச்சியப்பன். சரி, வாருங்கள் முகம் கழுவி விட்டு , தண்ணீர் குடித்துவிட்டு கொஞ்ச நேரம் இருந்து செல்வோம். '

கிணற்றருகே வந்தபோது மாடு மெதுவாக பின்னோக்கி நடந்தது. கயிறு இழுக்க கிணற்றுக்குள் மூழ்கியிருந்த தோல் தொட்டி தண்ணீரை நிரப்பிக்கொண்டு மேலே வந்தது.

'அஹ்' அஹ்"ன்னு எருதுகளை ஓட்டியவன் கூப்பிட, மாடு இன்னும் சில அடிகள் நகர்ந்தது. ஒரே சாய்ச்சலில் கமலை வாய்திறந்து தண்ணீரை வாய்க்காலில் கொட்டியது. அங்கிருந்து நீர் சிறு ஓடையாய் பாய்ந்து வயலுக்குள் நுழைந்தது. சத்தியநாதனின் பார்வை வாய்க்காலில் ஓடிக்கொண்டிருந்த தண்ணீரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. அவருடைய முகமும் அகமும் மலர்ந்திருந்ததை தாவீது கண்டு இரசித்தான்.

இருவரும் கைக் கால்களைக் கழுவி தண்ணீரை அள்ளிப் பருகினர். சற்று நேரம் கிணற்றின் அருகில் அமர்ந்திருந்து விட்டு எழுந்தனர். அங்கிருந்து பத்துநிமிட நடை நேரம்தான் ஊர். ஊரை நெருங்கிய போது யாரோ 'முத்து. . . . ' என்று அழைக்கும் சத்தமும் கூடவே கலகலப்பான பேச்சு சத்தமும் கேட்க . . . அங்கே முத்துவின் மாமா,



அத்தை, அக்கா அவர்களோடு சில ஊரார் என்று ஒரு கூட்டம் முத்துவை வரவேற்க வந்து கொண்டிருந்தனர். இருவரும் நின்றனர்.

'வா முத்து அண்ணே. . . நீ எப்ப வருவான்னு தெனமும் நெனைச்சிட்டே இருந்தோம்' என்ற ஒருவன் அவன் அருகில் சென்று ஒருவித தயக்கத்தோடு நின்றான். முத்து அவன் அருகில் சென்று அவனை அணைத்துக் கொண்டான். எல்லோரும் அவனைச் சுற்றி நின்று அன்பு மழைப் பொழிந்தனர். முத்துவின் மாமன் சத்திய நாதனை கைக்கூப்பி வணங்கினார்.

முத்து, 'மாமா இவர் எனது குருநாதர். எனக்கு கற்றுத் தருபவர். என் மீது உங்களைப் போலவே அன்பு காட்டுபவர். இவர்கள் தான் எனக்கு எல்லாமே' என்று அவனும் அவரை நோக்கி வணங்கினான்.

சத்தியநாதன், ' கர்த்தரே நம் அனைவருக்கும் தலைவர். நாம் அவருடைய பிள்ளைகள். கர்த்தருடைய திருப்பெயர் மகிமைப் பெறுவதாக' என்று வாழ்த்தி முத்துவின் மாமனை தன் நெஞ்சோடு ஆரத்தழுவினார். எல்லோரும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். 'அதுசரி, நாங்கள் வந்திருப்பதை உங்களுக்கு யார் சொன்னது?' என்றார்.

'கிணத்தில நீங்கள் தண்ணி குடிச்சிடிருந்ததைப் பார்த்த இந்த பையன் தான் எங்க எல்லார்கிட்டையும் ஒடிவந்து சொன்னான். நாங்க அது முத்துதான்னு புரிஞ்சிகிட்டோம். ஒடனே இங்க வந்துட்டோம்' என்றான் இன்னொருவன்.

'சரி வாங்க போவோம். வெயில் ஏறி வருது. ' என்றார் மாமன். இருவர் கையிலும் இருந்த பைகளையும் வாங்கி கொண்டனர். சத்திய நாதன் அவர்களது அன்பை மகிழ்ச்சியோடு கவனித்தபடி நடந்தார். புன்முறுவலோடு அவரை ஏறிட்டுப் பார்த்தான் முத்து. அதற்குள் ஊர்முழுக்க முத்து வந்த செய்தி பரவ, ஆங்காங்கே நின்றிருந்த அனைவரும் முத்துவை எதிர்நோக்கி வந்தனர்.

'இவ்வளவு அன்பான மக்களை நான் வேறெங்கும் காணவில்லை தாவீது. உண்மையிலேயே நீயும் உனது இந்த ஊரார் அனைவரும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். ' என்றார் .

முத்துவின் அக்கா வீட்டின் முன்னால் போடப்பட்டிருந்த அதே மணல் விரிப்பில் அனைவரும் அமர்ந்தனர். முத்துவும் சத்தியநாதனும் அவர்களோடு அன்போடு பேசினர். இயேசுவின் அன்பைப் பற்றி பேச விரும்பியதை அவர்கள் தெரிவித்தனர்.

சத்தியநாதன் எழுந்து நின்று, 'இயேசு நம் அனைவரையும் நேசிக்கிறார். அவர் நம்மோடு இருக்கிறார். . . . ' என்று பேசத் தொடங்கினார். மக்கள் மகிழ்ச்சியோடு கேட்டுக்கொண்டிருந்தனர்.

தொடர்ந்து பயணிப்போம்...

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

திருநெல்வேலி மிஷனின் ஆரம்பகால வரலாறும்

மருதூர்கரையின் சுவடுகளும்

தென்னிந்திய கிறிஸ்தவ வரலாற்றில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு மிக முக்கியப் பங்கு உண்டு. வெறும் ஒரு சிலரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நற்செய்திப் பணி, பல மிஷனரிகளின் தியாகத்தாலும், கிராமப்புற மக்களின் எழுச்சியாலும் மாபெரும் விருட்சமாக வளர்ந்தது. இதன் வரலாற்றுப் பயணம் பல கட்டங்களைக் கொண்டது.

1. சுவார்ட்ஸ் ஐயரும் குளோரிந்தாவும் (1771 – 1790)

திருநெல்வேலியில் புரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் ரெவ். சி.எஃப். சுவார்ட்ஸ் (Rev. C.F. Swartz). திருச்சியில் பணியாற்றி வந்த இவர், 1771-ல் பாளையங்கோட்டைப் பகுதியுடன் தொடர்பை ஏற்படுத்தினார்.

1. 1778-ல் சுவார்ட்ஸ் பாளையங்கோட்டைக்கு வந்தபோது, மராட்டிய பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒரு கைம்பெண்ணுக்கு ஞானஸ்நானம் அளித்தார். அவருக்கு ‘குளோரிந்தா‘ (Clorinda) என்று பெயரிடப்பட்டது. இவரே திருநெல்வேலியின் முதல் அதிகாரப்பூர்வ கிறிஸ்தவ விசுவாசி ஆவார்.
2. குளோரிந்தாவின் முயற்சியால் ஆங்கிலேய அதிகாரிகளின் உதவியுடன் 1780-ல் பாளையங்கோட்டையில் முதல் தேவாலயம் கட்டப்பட்டது. 1780-ஆம் ஆண்டின் சபைப் பதிவேட்டின்படி அங்கு 40 விசுவாசிகள் மட்டுமே இருந்தனர்.

2. ஜானிக்கே ஐயரும் முதலூர் உருவாக்கமும் (1791 – 1800)

1791-ல் ரெவ். ஜோசப் டேனியல் ஜானிக்கே (Rev. J.D. Jaenicke) பாளையங்கோட்டைக்கு முதல் ஐரோப்பிய மிஷனரியாக வந்து சேர்ந்தார். இவர் தஞ்சாவூரிலிருந்து சத்யநாதன் என்பவரை அழைத்து வந்து, திருநெல்வேலியின் முதல் சுதேசிப் போதகராக (Native Priest) நியமித்தார்.

1. இக்காலகட்டத்தில், நாடார் (சாணார்) சமுதாய மக்களிடையே கிறிஸ்தவம் பரவத் தொடங்கியது. முதல் நாடார் கிறிஸ்தவரான டேவிட், முதல் உபதேசியாராகவும் பொறுப்பேற்றார்.
2. 1799-ல் பல கிராமங்களில் இருந்து துன்புறுத்தலால் வெளியேறிய கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து 'முதலூர்' (Mudalur) என்ற புதிய முழுமையான கிறிஸ்தவ கிராமத்தை உருவாக்கினர்.

3. கெரிக்கே ஐயரும், இருண்ட காலமும் (1800 – 1815)

ஜானிக்கேவின் மறைவுக்குப் பின், ரெவ். கெரிக்கே (Gericke) 1802-ல் திருநெல்வேலியில் சுற்றுப்பயணம் செய்து ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஞானஸ்நானம் அளித்தார். ஆனால் போதிய போதகர்கள் இல்லாததாலும், 1810 - 1811 ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான காலரா (கொள்ளை நோய்) மற்றும் வறட்சியின் காரணமாகவும் பல கிறிஸ்தவர்கள் மீண்டும் தங்கள் பழைய வழிபாட்டு முறைகளுக்கே திரும்பிய 'இருண்ட காலம்' உருவானது.

4. ஜேம்ஸ் ஹஃப் மற்றும் புதிய எழுச்சி (1816 – 1821)

1816-ல் பாளையங்கோட்டைக்கு ஆங்கிலேய அரசாங்க சேப்ளினாக (Chaplain) வந்த ரெவ். ஜேம்ஸ் ஹஃப் (Rev. James Hough), நலிவடைந்திருந்த திருச்சபைக்குப் புத்துயிர் ஊட்டினார். பள்ளிகளை நிறுவிய அவர், மதராஸில் உள்ள சர்ச் மிஷனரி சொசைட்டியிடம் (CMS) திருநெல்வேலிக்கு மிஷனரிகளை அனுப்புமாறு கோரிக்கை வைத்தார். அதன்படி 1820-ல் ரெவ். சார்லஸ் ரேனியஸ் (C.T.E. Rhenius) பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தார்.

மருதூர்க்கரை

தென் தமிழகக் கடற்கரையின் மறைக்கப்பட்ட வரலாறு
[சுமார் 1820கள் - 1830கள்]

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகிலுள்ள மருதூர்க்கரை, நீண்ட கடற்கரை வரலாற்றைக் கொண்ட ஒரு கிராமமாகும். டாக்டர் கால்டுவெல் போன்றோரின் ஆரம்பகாலப் மிஷன் வரலாற்றுப் பதிவுகளில் நேரடியாக இதன் பெயர் இல்லாவிட்டாலும், ரேனியஸ் போன்ற மிஷனரிகளின் செயல்பாடுகள் குறித்த ஆவணங்கள், இக்கிராமம் ஆரம்பகால கிறிஸ்தவ மிஷன் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதை உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, 1825 ஆம் ஆண்டு ரேனியஸின் மிஷன் பட்டியலில் வரலாற்று பேராசிரியர் தே அ கிறிஸ்துதாஸ் அவர்கள் கொடுத்த பட்டியலில் மருதூர்க்கரையின் இருப்பு, இக்கிராமத்தின் மத மற்றும் சமூக மாற்றத்தின் ஒரு தெளிவான காலவரிசை நமக்கு கிடைகின்றது.

1. ரேனியஸின் திருநெல்வேலி மிஷன் மற்றும் மருதூர்க்கரை:

ரேனியஸ், 1820 ஆம் ஆண்டில் திருநெல்வேலிக்கு வந்து, CMS (Church Missionary Society) மிஷனைப் புத்துயிர் ஊட்டி, அதனை ஒரு வலுவான இயக்கமாக மாற்றினார். அவரது மிஷன் செயல்பாடுகளின் முக்கிய நோக்கம், கிராமப்புறங்களில் புதிய சபைகளை நிறுவுவதும், ஏற்கனவே இருந்த சிறிய குழுக்களை ஒழுங்கமைப்பதுமாகும். 1825 ஆம் ஆண்டு அவர் தொகுத்த பட்டியலில் மருதூர்க்கரை இடம்பெற்றிருப்பது, அது அக் காலகட்டத்திலேயே மிஷனின் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒரு கிராமமாக மாறிவிட்டதைக் காட்டுகிறது.

2. கிராம மிஷன் முறை மற்றும் மருதூர்க்கரை:

ரேனியஸ், 'கிராம மிஷன் முறை' (Village Mission System) என்ற அணுகுமுறையை திறம்படப் பயன்படுத்தினார். இதன் மூலம், பாளையங்கோட்டை போன்ற மைய நகரங்களிலிருந்து மிஷனரிகள் மற்றும் உபதேசியார்கள் (Catechists) கிராமங்களுக்குச் சென்று போதித்தனர். மருதூர்க்கரை, இந்த கிராம மிஷன் வலையமைப்பின் ஒரு பகுதியாகச் செயல்பட்டது.

1. உபதேசியார்களின் பணி: மருதூர்க்கரை போன்ற கிராமங்களுக்கு நிரந்தரமாக அல்லது அவ்வப்போது உபதேசியார்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள், ரேனியஸின் வழிகாட்டுதலின்படி, கிறிஸ்துவ போதனைகளைப் பரப்பவும், ஜெபக் கூட்டங்களை நடத்தவும், கிராம மக்களின் ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்கவும் செய்தனர்.
2. ஆரம்பக்காலக் குழுக்கள்: 1825 வாக்கில், மருதூர்க்கரையில் கிறிஸ்தவ போதனைகளை ஏற்றுக்கொண்ட ஒரு சிறிய குழு (congregation) உருவாகியிருக்க வேண்டும். ரேனியஸின் பட்டியல், இத்தகைய குழுக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் ஒரு சான்றாகும்.

3. கூட்ட மாறுதல்கள் மற்றும் மருதூர்க்கரை:

ரேனியஸ் காலத்தில், தென் தமிழகத்தில் பெரிய அளவிலான கூட்ட மதமாற்றங்கள் நிகழ்ந்தன. பல கிராம மக்கள் ஒன்றாக கிறிஸ்தவத்தை ஏற்றனர். மருதூர்க்கரை, அத்தகைய கூட்ட மாற்றங்களுக்கு உட்பட்ட கிராமங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம். இது, தனிப்பட்ட சிலரின்

மாற்றமாக இல்லாமல், ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவினரோ அல்லது கிராமத்தின் கணிசமான பகுதியினரோ கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது.

4. கல்விப் பணிகளின் தாக்கம்:

ரேனியஸ் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். அவர் கிராமங்களில் பள்ளிகளை நிறுவ ஊக்குவித்தார். மருதூர்கரையில் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம், அல்லது அருகிலுள்ள பெரிய கிராமத்தில் உள்ள பள்ளிக்கு மருதூர்கரையின் குழந்தைகள் சென்றிருக்கலாம். கல்வி, வேதவசனங்களைப் புரிந்துகொள்ளவும், சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவரவும் உதவியது.

5. ரேனியஸ் பட்டியலின் முக்கியத்துவம்:

1825 ஆம் ஆண்டு ரேனியஸின் பட்டியல் வெறும் கிராமப் பெயர்களின் தொகுப்பு அல்ல. அது:

1. மிஷன் பரவலின் வரைபடம்: அக் காலகட்டத்தில் கிறிஸ்தவம் பரவியிருந்த பகுதிகளையும், மிஷனின் செயல்பாடுகளின் தீவிரத்தையும் காட்டுகிறது.
2. ஆரம்பகால சபைகளின் ஆதாரம்: மருதூர்கரை போன்ற கிராமங்களில் ஆரம்பகால கிறிஸ்தவ சபைகள் அல்லது குழுக்கள் உருவாகியிருந்ததற்கான உறுதியான ஆதாரம்.
3. சமூக மாற்றத்தின் குறியீடு: இக்கிராமங்களில் நிகழ்ந்த மத மற்றும் சமூக மாற்றங்களை மறைமுகமாகப் பதிவு செய்கிறது.

6. மருதூர்கரை சேகரத்தின் துவக்கம்

[Rhenius-ன் பின்]:

ரேனியஸின் பணிக்குப் பிறகு, இந்தப் பட்டியலில் உள்ள கிராமங்கள் மேலும் வளர்ச்சியடைந்தன. மருதூர்கரை, ஒரு 'outstation' ஆக இருந்து, காலப்போக்கில் ஒரு முழுமையான சேகரமாக (Pastorate) அல்லது அருகிலுள்ள பெரிய சேகரத்தின் ஒரு பகுதியாக உருவெடுத்தது. ரேனியஸ் இட்ட அடித்தளம், பிற்காலத்தில் மருதூர்கரையில் தேவாலயங்கள் கட்டப்படுவதற்கும், ஒரு வலுவான சபை அமைப்பு உருவாகுவதற்கும் வழிவகுத்தது.

முடிவுரை:

1825 ஆம் ஆண்டு ரேனியஸ் பட்டியலில் மருதூர்கரை இடம்பெற்றிருப்பது, இக்கிராமம் தென் தமிழகக் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட இடத்தைப் பிடித்திருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கிறது. இது, மருதூர்கரை வெறும் ஒரு கடலோரக் கிராமமாக இல்லாமல், மிஷனரி செயல்பாடுகள், சமூக மாற்றங்கள் மற்றும் புதிய மத நம்பிக்கைகளின் எழுச்சி ஆகியவற்றின் ஒரு நேரடி சாட்சியாக இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ரேனியஸின் பதிவுகள், மருதூர்கரையின் வரலாற்றை மேலும் துல்லியமாகப் புரிந்துகொள்ள உதவும் ஒரு பொக்கிஷமாகும்.

மன்னா செல்வகுமார்

Visit us

No. 99/14, 99/15
ASAR Campus, Aladipatti Road,
Surandai – 627859,
Tenkasi District,
Tamil Nadu, South India.

+91-91767-80001
christianhistorical@gmail.com
https://christianhistoricalsociety.in/

தென்னிந்தியாவில் சமயக்கலை

முனைவர்.தா கிறிஸ்டியன் கீலர்

முன்னுரை

சமயம் என்பதற்கு ‘மனித மனங்களைச் சமைத்துப் பக்குவப்படுத்துதல்’ என்று பொருள் கொள்ளப்படுகிறது. இந்தியாவில் பௌத்தம், சீக்கியம், சமணம், சைவம், வைணவம் முதலிய பல்வேறு சமயங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. இக்கட்டுரையில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்துவ சமயம் செழித்து வளர்ந்த வரலாற்றைக் காண்போம்.

தொடக்க காலம்

இயேசு கிறிஸ்துவின் நேரடிச் சீடரான புனித தோமா, கி.பி. 52-ஆம் ஆண்டில் மன்னர் கொண்டபோரஸ் காலத்தில் கேரளக் கடலோரப் பகுதிகளில் கிறிஸ்தவத்தின் விதைகளை விதைத்தார். சுமார் பத்து ஆண்டுகளுக்குள் சென்னை மயிலாப்பூரில் ஈட்டியால் குத்தப்பட்டு, அவர் இரத்த சாட்சியாக மரித்தார். புனித தோமாவால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டவர்கள் ஆங்காங்கே தனித்து வாழ்ந்து வந்தனர். 15-ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியரின் வருகையாலும், இயேசு சபையினரின் வருகையாலும் கிறிஸ்தவம் புத்துயிர் பெறத் தொடங்கியது.

திருநெல்வேலிச் சீமை

'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி' என்று திருஞானசம்பந்தரால் போற்றப்பட்ட நெல்லை, தென்னிந்தியாவில் சமயங்களின் மையமாகத் திகழ்கிறது. இதனை 'தண்பொருனைப் புனல் நாடு' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். 2,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த நெல்லையின் வரலாற்றைக் கூறும் நூல் 'வேணுவன புராணம்' ஆகும். இங்குள்ள நெல்லையப்பர் - காந்திமதி கோவிலில் உள்ள லிங்கம் ‘வேணுவன லிங்கம்’ என்று அழைக்கப்படுகிறது.

முந்தைய நெல்லை மாவட்டத்திலிருந்த 'இராமேஸ்வரம்' தேசத்திற்கே நல்வரமாகத் திகழ்கிறது. 'திருச்செந்தூர்', முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்தியா முழுவதும் இஸ்லாமியர்கள் பரவலாக வாழ்ந்தாலும், தென்னிந்தியாவில் குறிப்பாக நெல்லை, கோடியக்கரை, நாகூர் போன்ற இடங்களில் வாழும் இஸ்லாமியர்கள் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டவர்கள். மேலை நாட்டு கிறிஸ்துவ அருட்பணியாளர்கள் பல்வேறு திருச்சபைப் பிரிவுகளிலிருந்து இங்கு வந்து தொண்டாற்றியுள்ளனர். இன்று இந்நிலம் மத நல்லிணக்கப் பூமியாகத் திகழ்கிறது.

தென்னிந்தியாவில் கத்தோலிக்கத் திருச்சபை

புனித பிரான்சிஸ் சேவியர் 15-ஆம் நூற்றாண்டில் கோவாவிற்கு வந்து, பின் தென்னிந்திய கடற்கரைப் பகுதிகளில் நற்செய்தியை அறிவித்தார். 10 ஆண்டுகள் தமிழகத்தில் தொண்டாற்றிய அவர், சீனா செல்லும் வழியில் சான்சியன் தீவில் மரித்தார். இவரின் அழியாத உடல் இன்றும் கோவாவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கேரளப் பகுதிகளில் மார்த்தோமா சபை, சிரியன் கத்தோலிக்க சபை, ஆர்த்தோடாக்ஸ் சபை முதலிய பிரிவுகள் வளர்ந்துள்ளன. புனித சேவியரைத் தொடர்ந்து என்றிக்ஸ் அடிகளார், தத்துவப் போதகரான இராபர்ட் டி நோபிலி, வீரமாமுனிவர் (ஜோசப் பெஸ்கி) ஆகியோர் தமிழகத்தில் கத்தோலிக்கத்தை வளர்த்தனர்.

தத்துவப் போதகர்: தமிழ் உரைநடையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

வீரமாமுனிவர்: தமிழில் சிறுகதை வடிவத்தையும், எழுத்துச் சீர்திருத்தத்தையும் தந்தவர்.

இவர்கள் இருவரும் காவி உடை தரித்து, தமிழ்ப் பண்பாட்டுடன் நற்செய்தியை அறிவித்தனர்.

என்றிக்ஸ் அடிகளார்: தூத்துக்குடிக்கு அருகிலுள்ள புண்ணைக்காயலில் முதல் அச்சுக் கூடத்தை நிறுவி, 'தம்பிரான் வணக்கம்' என்னும் முதல் நூலை அச்சிட்டார்.

அருளானந்தர் (ஜான் டி பிரிட்டோ): 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் கிறிஸ்துவ நெறியைக் காத்ததற்காக ஓரியூரில் மன்னரால் சிரச்சேதம் செய்யப்பட்டு வேத சாட்சியாக மரித்தார்.

தமிழகத்தில் சீர்திருத்தத் திருச்சபை (Protestant)

ஜெர்மனி நாட்டிலிருந்து 1706-ஆம் ஆண்டு ஜூலை 9-ஆம் நாள், பர்த்தலோமேயு சீகன்பால்கு மற்றும் ஹென்றிப் புளூட்சோ ஆகியோர் தரங்கம்பாடிக்கு வந்தனர். சீகன்பால்கு திண்ணைப் பள்ளியில் அமர்ந்து மணலில் எழுதித் தமிழ் கற்றார். அவரே முதன்முதலில் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டார்.

1750-இல் வந்த சுவார்ட்ஸ் பாதிரியார், திருச்சிராப்பள்ளியில் ஆங்கிலப் படையினருக்குப் போதகராகப் பணியாற்றினார். அவரால் அர்ப்பணிக்கப்பட்ட 'கிறிஸ்துநாதர் ஆலயம்' திருச்சி தெப்பக்குளத்திற்கு வடக்கில் உள்ளது. பின்னர் தஞ்சையில் தங்கிப் பெரும் சமயப் பணியாற்றியுள்ளார்.

திருநெல்வேலியில் சீர்திருத்தத் திருச்சபை

1785-இல் பாளையங்கோட்டையில் முதல் தேவாலயத்தைக் கிளாரிந்தா என்ற அம்மையார் கட்டினார். இவரே திருநெல்வேலியில் சீர்திருத்தக் கிறிஸ்தவம் காலூன்றக் காரணமாக இருந்தார். அருள்திரு கால்டுவெல் கண்டுபிடித்த ஆலயப் பதிவேட்டின்படி, கிளாரிந்தா உட்பட ஐந்து நபர்கள் முதன்முதலில் திருமுழுக்குப் பெற்றது தெரியவருகிறது. நெல்லைக் கிறிஸ்தவம் மேலைநாட்டவரால் தொடங்கப்பட்டாலும், உள்நாட்டவர்களின் தீவிர ஈடுபாட்டாலேயே பெருவளர்ச்சி பெற்றது.

கேரளப் பகுதியில் கிறிஸ்தவ சமயம்

இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்றி பேக்கர், பெஞ்சமின் பெய்லி, ஜோசப் ஃபென் ஆகிய மூவரும் 'திருவாங்கூர் மூவர்' என்று அழைக்கப்படுகின்றனர்.

அருள்திரு பேக்கர்: கோட்டயம் பகுதியில் கல்விப் பணியாற்றியவர். இவருடைய முயற்சியால் 1855-இல் அடிமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பெஞ்சமின் பெய்லி: 1821-இல் மலையாள அச்சகத்தை நிறுவி, ஆங்கில - மலையாள அகராதியை வெளியிட்டார்.

ஜோசப் ஃபென்: வேதகாமத்தை மலையாளத்தில் மொழிபெயர்த்தார்.

கேரளா இன்று கல்வியில் முதன்மையான மாநிலமாகத் திகழ இவர்களே அடித்தளம் அமைத்தனர்.

வடநெல்லை மூவர் மற்றும் பிற அருட்பணியாளர்கள்

தாமஸ் ராக்லாந்து, டேவிட் ஃபென், மெடோஸ் ஆகிய மூவரும் 'வடநெல்லை மூவர்' எனப்படுகின்றனர். இவர்கள் தமிழக அருட்பணியாளர்களுடன் இணைந்து கிராமம் கிராமமாகச் சென்று பணியாற்றினர்.

முதல் இரத்த சாட்சி: 1823-இல் கிறிஸ்தவத்தை ஏற்றதற்காகக் கொல்லப்பட்ட நம்பியம்மாள், நெல்லைச் சீர்திருத்த சபையின் முதல் இரத்த சாட்சியாவார்.

சார்லஸ் ரேனியஸ்: 'நெல்லையின் அப்போஸ்தலர்' என்று அழைக்கப்படுபவர். இவர் 15 ஆண்டுகளில் 400 சபைகளை நிறுவினார்.

கால்டுவெல்: இடையன்குடியில் தங்கி 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலைப் படைத்தார்.

மர்காஷிஸ்: நாசரேத் நகரை உருவாக்கி, அங்குத் தொழிற்கல்வி நிறுவனங்களை அமைத்தார்.

ரிங்கல் தௌபே: நாகர்கோவில் பகுதியில் தோள் சீலைப் போராட்டத்தை முன்னெடுத்து, பெண்கள் ரவிக்கை அணியும் உரிமையைப் பெற்றுத் தந்தார்.

ஏமி கார்மைக்கேல்: டோனாவூரில் ஆதரவற்ற சிறுமிகளுக்காகப் பணியாற்றியவர்.

ஜி.யு. போப்: சாயர்புரத்தில் கல்விப் பணியாற்றியதுடன், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

முடிவுரை

தென்னிந்தியக் கிராமங்களில் நிகழ்ந்த மதமாற்றம் என்பது வெறும் பெயரளவிலான மாற்றம் மட்டுமல்ல; அது அறியாமை மற்றும் கொத்தடிமைத் தளைகளை உடைத்தெறிந்த ஒரு சமூகப் புரட்சியாகும். இதனால்தான் திருநெல்வேலியை 'தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு' என்று அழைக்கிறோம். பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி, சாராள் டக்கர் கல்லூரி போன்றவை உலகளாவிய அறிஞர்களை உருவாக்கியுள்ளன. அறிவும் ஆன்மிகமும் இணைந்த 'தென்னிந்தியச் சமயக்கலை', தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாகத் திகழ ஆணிவேராக அமைந்துள்ளது.

திருநெல்வேலி வரலாற்றில் இருந்து...

கடல்கடந்து சென்ற நெல்லைப் போதகர்கள்! (1936 வரை மட்டும்)

திருநெல்வேலி மண், ஆன்மீகத்திலும் கல்வியிலும் மட்டுமல்ல, தன்னலமற்ற சேவையிலும் சிறந்து விளங்கியது. 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில், பிழைப்புத் தேடி தேயிலைத் தோட்டங்களுக்கும், ரப்பர்க் காடுகளுக்கும் கடல்கடந்து சென்ற தமிழர்களுக்காக, திருநெல்வேலியிலிருந்து பல போதகர்கள் அனுப்பப்பட்டனர்.

நமது நெல்லை மண்ணிலிருந்து, இலங்கை, மலேசியா, மொரிஷியஸ், பர்மா, தென்னாப்பிரிக்கா எனப் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழர்களிடையே தேவாலயங்களை நிறுவி, வழிகாட்டிய சில முக்கியப் போதகர்களின் வரலாற்றுப் பட்டியல் இதோ:

1. இலங்கை (Ceylon Tamil Cooly Mission)

இலங்கை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக 'தமிழ் கூலி மிஷன்' திட்டத்தின் கீழ் நெல்லையிலிருந்து சென்றவர்கள்:

- Rev. William Clark (1868-1879)
- Rev. Thomas Foulkes (1858-1859)
- Rev. John Pickfor (1863-1866)
- Rev. David Fenn (1866-1867)
- Rev. Giulio Cesare Mola (கொழும்பு - 1867-1869)
- Rev. Hugh Horsley (1881-1894)
- Rev. Edwin Blackmore (1878-1879 - யாழ்ப்பாணத்தில் காலமானார்)
- Rev. Samuel Samuel (கொழும்பு திருமண்டலம் - 1884-1895. கொழும்பிலேயே காலமானார்)
- Rev. Joseph Ilsley (கண்டி - 1884-1915)
- Rev. Robert Hamilton Whelan (யாழ்ப்பாணம் & கம்பளை - 1925-1930)
- Rev. Samuel Devadasan Lazarus (முத்துவால் - Muttiwal)
- Rev. John Davies Thomas (1886-1894 - கொழும்பில் காலமானார்)

2. மலேசியா மற்றும் சிங்கப்பூர் (Malaya & Singapore)

- Rev. Abraham Gnanamani: தைப்பிங் மற்றும் பினாங்கு, மலேசியா (1896-1908)
- Rev. Rama Krishna Abraham: ஈப்போ மற்றும் பினாங்கு, மலேசியா (1912-1916). பின்னர் சிங்கப்பூர் திருமண்டலம் (1920 முதல்)
- Rev. Swaminathan Charles: சிங்கப்பூர் திருமண்டலம் (1928 முதல்)

3. தென்னாப்பிரிக்கா (South Africa)

- Rev. Solomon Vedakkan: பீட்டர்மாரிட்ஸ்பர்க் (Pietermaritzburg) (1890-1895)
- Rev. Diraviam Koilpillai: நடால் (Natal) மாகாணம் (1915)

4. மொரிஷியஸ் & சீஷெல்ஸ் (Mauritius & Seychelles)

- Rev. Stephen Hobbs: மொரிஷியஸ் மற்றும் சீஷெல்ஸ் (1856-1877)
- Rev. Henry Constantine Huxtable: மொரிஷியஸ் பிஷப்பாகப் பொறுப்பேற்றார் (1870. அங்கேயே காலமானார்)
- Rev. Arthur Taylor: போர்ட் லூயிஸ், மொரிஷியஸ் (1856-1859)
- Rev. Nigel Honiss: மொரிஷியஸ் (1876-1891)
- Rev. Vincent Ward Harcourt: மொரிஷியஸ் தேவாலய கேனன் (1891-1907)
- Rev. Arthur Kington Finnimore: மொரிஷியஸ் (1893-1901)

5. பர்மா / மியான்மர் (Burma)

- Rev. Samuel Velliah Jesudason: ரங்கூன் (1911-1915)
- Rev. Swamiadian David Maduram: ரங்கூன் திருமண்டலம் (1927-1932)
- Rev. R. Gnanakkan Jesudason: மாண்டலே (Mandalay) (1935 முதல்)

6. பிற நாடுகள்

- Rev. William John Thorburn: மேற்கு ஆஸ்திரேலியா (1888-1889)
- Rev. Harold Pakenham Young: சியாரா லியோன், ஆப்பிரிக்கா (1916-1918) மற்றும் ஆஸ்திரேலியா (1936 முதல்)
- Rev. Frederick Barrow Matthews: பஹாமாஸ் தீவுகள் (1884-1908)
- Rev. Edward Newman: ஜமைக்கா (1835-1840)

இந்த வரலாற்றுப் பதிவு, திருநெல்வேலியின் சேவை எந்த அளவிற்கு உலகளாவியதாக இருந்தது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

கல்லறை வென்றது!

ஒரு மிஷனரியின் இறுதிச் செய்தியும், உயிர்த்தெழுதலின் நித்திய நம்பிக்கையும்.

மன்னா செல்வகுமார்
கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, அனைவருக்கும் உயிர்த்தெழுதல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

இன்று, நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் இந்த மகிமையான நாளில், 175 ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி மண்ணுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த ஒரு மிஷனரியின் இறுதி நாட்களில், உயிர்த்தெழுதலின் செய்தி எப்படி ஒரு மையப் புள்ளியாக இருந்தது என்பதை நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

ஒரு மிஷனரியின் பிரியாவிடை

1847 ஆம் ஆண்டு... திருநெல்வேலியின் புகழ்பெற்ற மிஷனரியான ரெவரெண்ட் ஜார்ஜ் பெட்டிட், தனது 14 ஆண்டு கால ஊழியத்தை முடித்துக்கொண்டு, தனது தாய்நாடான இங்கிலாந்திற்குத் திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அது, கண்ணீரும், ஜெபமும் நிறைந்த ஒரு பிரியாவிடைக்கான நேரம்.

அவர், தான் உருவாக்கிய திருச்சபைக்கு இறுதியாக என்ன பரிசைக் கொடுத்துவிட்டுச் செல்லப் போகிறார்?

கப்பலில் எழுதப்பட்ட ஒரு கருவூலம்

பெட்டிட், வெறும் கையுடன் தனது பயணத்தைத் தொடங்கவில்லை. அவர், தான் அன்பு காட்டிய உள்ளூர் உபதேசியார்களுக்காக, ஒரு விலைமதிப்பற்ற அறிவுப் பொக்கிஷத்தை உருவாக்கினார். அதுதான், கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளை விளக்கும் 'விசுவாச அறிக்கை' (The Apostles- Creed) மீதான ஒரு தொடர் பிரசங்கத் தொகுப்பு.

கப்பலே அவரது எழுத்து மேசையானது:

இங்கிலாந்திற்கான தனது நீண்ட, பல மாதக் கப்பல் பயணத்தின்போதும், அவர் அந்தப் பிரசங்கங்களை இறுதித் திருத்தம் செய்தார். கடலின் அலைகளுக்கு மத்தியில், அவரது பேனா, திருநெல்வேலி விசுவாசிகளுக்காக உழைத்தது.

பிரசங்கங்களின் இதயம்: உயிர்த்தெழுதலின் செய்தி!

அந்தப் பிரசங்கத் தொடரின் இதயமாக, 'கிறிஸ்துவின்

சிலுவை மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்' என்ற அசைக்க முடியாத நம்பிக்கை விளங்கியது.

ஏன் உயிர்த்தெழுதல் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றது?

1. **மரண பயத்திலிருந்து விடுதலை:** 19 ஆம் நூற்றாண்டில், பேய் வழிபாடு, மரண பயம் மற்றும் முன்னோர்களின் ஆவிகள் குறித்த அச்சத்தில் மக்கள் வாழ்ந்தனர். 'கிறிஸ்து மரணத்தை ஜெயித்துவிட்டார், எனவே மரணத்தைக் கண்டு பயப்படத் தேவையில்லை' என்ற உயிர்த்தெழுதலின் செய்தி, அவர்களுக்கு ஒரு மாபெரும் விடுதலையை அளித்தது.
2. **மூடநம்பிக்கைகளின் தகர்ப்பு:** இறந்தவர்கள் பேய்களாக அலைவதில்லை, அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காகக் கல்லறைகளில் இளைப்பாறுகிறார்கள் என்ற புதிய புரிதலை அது வழங்கியது.
3. **நித்திய வாழ்வின் ஆதாரம்:** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், நமக்கும் ஒரு நாள் உயிர்த்தெழுதல் உண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை அளித்தது. இதுவே, துன்பங்கள், நோய்கள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில், நமது முன்னோர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிற்க உதவியது.

பெட்டிட், இந்த உயிர்த்தெழுதலின் சக்தியை, தனது இறுதிப் பிரசங்கங்கள் மூலம், திருநெல்வேலித் திருச்சபையின் இதயத்தில் ஆழமாகப் பதிய வைத்தார்.

நமக்கான செய்தி

இன்று நாமும், 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!' என்று ஆர்ப்பரிக்கும்போது, அந்த வார்த்தைகளின் உண்மையான சக்தியை உணர்ந்துகொள்வோமாக.

1. நமது வாழ்வில் உள்ள பயங்கள், கவலைகள் மற்றும் நம்பிக்கை அற்ற நிலையில் கல்லறைகளை உடைத்தெறிய, உயிர்த்தெழுதலின் வல்லமை நமக்கு உண்டு.
2. நோய், இழப்பு, மற்றும் அநீதிக்கு மத்தியிலும், மரணத்தை வென்ற ஒரு மீட்பர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

மிஷனெரி பெட்டிட்டைப் போல, நாமும் இந்த உயிர்த்தெழுதலின் செய்தியை, நமது வார்த்தைகளால் மட்டுமல்ல, நமது வாழ்க்கையாலும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவோம்.

'அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.' (மத்தேயு 28:6)

ஆமென்.

கிறிஸ்தவ வரலாற்று சங்கம் & யாவே மீடியா

இணைந்து நடத்தும் **'சபையின் கதை!'** நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

📅 தேதி: மே 21 முதல் 23, 2026

📍 இடம்: கிறிஸ்தவ வரலாற்று சங்க நூலகம், சுரண்டை

👉 கலந்து கொள்ள தயவுசெய்து கீழே உள்ள விவரங்களை நிரப்பவும்.

நெஞ்சில் உரமுடன், சிவகாசியில் மரித்த சாட்சி:

ரெவரெண்ட் ஜான் தியோபிலஸ் ஜார்ஜ் பேரன்ப்ரூக்கின்

நினைவு தினம்!

இன்று, மார்ச் 29. திருநெல்வேலி மாவட்டத்தின் ஆன்மீகச் சிற்பியும், சுரண்டை, பாவூர் மற்றும் சிவகாசி மக்களின் கல்விக்காகத் தன் இளமை, குடும்பம், உயிர் என அனைத்தையும் தியாகம் செய்த மாபெரும் சி.எம்.எஸ் (CMS) மிஷனெரி ரெவரெண்ட் ஜான் தியோபிலஸ் ஜார்ஜ் பேரன்ப்ரூக் (Rev. John Theophilus George Barenbruck) அவர்களின் நினைவு தினம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக, இந்த நன்னாளில் அந்தத் தியாகச் செம்மலின் வரலாற்றை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

தந்தையின் ஆசையும், மகனின் அர்ப்பணிப்பும்:

ஜான் பேரன்ப்ரூக்கின் தந்தை, மாயவரத்தில் (மயிலாடுதுறையில்) மிஷனெரியாகப் பணியாற்றி, அங்கேயே தன் தொண்டையில் இரத்த நாளம் வெடித்து, ஜெர்மனியில் மரணமடைந்த ரெவரெண்ட் ஜி.டி. பேரன்ப்ரூக் (Rev. G.T. Barenbruck, 1789-1833) ஆவர்.

தந்தை இறக்கும்போது சிறுவனாக இருந்த ஜான், தன் தந்தையின் மரணச் சாசனத்தின்படி லண்டனில் உள்ள இஸ்லிங்டன் (Islington) சி.எம்.எஸ் கல்லூரியில் இறையியல் பயின்றார். படித்து முடித்ததும், 'நான் இந்தியாவிலேயே பிறந்தவன், எனக்குத் தமிழ் சரளமாகப் பேசத் தெரியும். என் தந்தை வியர்வை சிந்திய அந்தத் தமிழ் மண்ணிற்கே என்னை மிஷனெரியாக அனுப்புங்கள்' என்று லண்டன் சி.எம்.எஸ் சங்கத்திடம் கேட்டுப் பெற்று, 1844-ல் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வந்தார்.

சுரண்டை மண்ணில் ஒரு கல்விக் காவலர் (1844 – 1858):

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சுரண்டை (Surandei) மற்றும் பாவூர் (Pavoor) பகுதிகள் அவரது பிரதான ஊழியத் தளங்களாக அமைந்தன. 1845-ஆம் ஆண்டு, திருநெல்வேலி முழுவதும் 'விபூதி சங்கம்' என்ற அமைப்பால் கிறிஸ்தவர்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது, சுரண்டை மக்களின் வீடுகளையும், தேவாலயங்களையும் அவர் தன் உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றினார். 'எங்கும் கலவரங்கள் நடந்தாலும், என் பொறுப்பில் உள்ள சுரண்டை மாவட்டத்தில் 'பூரண அமைதி' (Perfect Peace) நிலவுகிறது' என்று அவர் லண்டனுக்கு எழுதிய கடிதம், அவர் எந்த அளவுக்குத் தன் மக்களை நேசித்தார் என்பதற்குச் சாட்சியாகும்.

அவரது அயராத உழைப்பால், பாவூர் மற்றும் சுரண்டை பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கல்வியறிவும், ஆன்மீக விழிப்பும் பெற்றனர்.

சிவகாசியில் கூடார ஊழியம்:

சுரண்டையில் தனது பணிகளைச் செவ்வனே முடித்த அவர், பின்னர் திருநெல்வேலியின் வடக்குப் பகுதியான சிவகாசிக்கு (Sivagasi) சென்றார். அங்குப் புகழ்பெற்ற மிஷனெரிகளான டி.ஜி. ராக்லேண்ட் (T.G. Rag-

land) மற்றும் டேவிட் ஃபென் ஆகியோருடன் இணைந்து 'கூடார ஊழியம்' (Tent Ministry) செய்தார். சொகுசான வீடுகளை விடுத்து, கொளுத்தும் வெயிலிலும், மழையிலும் சிவகாசிக் காடுகளில் கூடாரங்களை அமைத்து, பல மைல்கள் நடந்து சென்று சுவிசேஷத்தை அறிவித்தார்.

இந்தக் கடினமான காலகட்டத்தில்தான், அவரது அன்பு மனைவியும் இறந்துபோனார். தாயில்லாத தனது இரண்டு இரட்டைக் குழந்தைகளை (Twins) ஐரோப்பாவில் விட்டுவிட்டு, தன் தனிப்பட்ட துயரங்களை மறைத்துக்கொண்டு சிவகாசி மக்களுக்காக உழைத்தார்.

ரத்த சாட்சியாய் சிவகாசி மண்ணில் ஒரு விதை:

1858-ஆம் ஆண்டு மார்ச் மாதம், சிவகாசியைச் சுற்றியுள்ள கிராமங்களில் 'காலரா' (Cholera) நோய் கொடூரமாகப் பரவியது. மிஷனெரிகளுக்கு உதவியாக இருந்த சமையல்காரர்களுக்கும், கூடாரப் பணியாளர்களுக்கும் காலரா பரவியது. அப்போது பேரன்பூருக் தன் சொந்த உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், தன் கைகளாலேயே அவர்களுக்கு மருந்து கொடுத்து, இரவு பகலாகச் சேவை செய்தார். அதன் விளைவாக, அவருக்கும் காலரா தொற்றிக்கொண்டது.

மார்ச் 29-ஆம் தேதி (திங்கட்கிழமை), தன் முடிவு நெருங்குவதை உணர்ந்த அவர், சக மிஷனெரியான ராக்லேண்டிடம், 'என் பிள்ளைகளைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. அனாதையான என்னைத் தேவன் பார்த்துக்கொண்டார்; என் பிள்ளைகளையும் அவர் பார்த்துக்கொள்வார். நான் யாரை விசுவாசித்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும்' என்று கூறிவிட்டு, அமைதியாக உயிரைத் துறந்தார்.

சவப்பெட்டி கூடக் கிடைக்காத அந்த சிவகாசிக் கிராமத்தில், சில மரப்பலகைகளைக் கொண்டு ஒரு பெட்டியை உருவாக்கி, அதிகாலையிலேயே சிவகாசி மிஷனெரி பங்களாவின் வளாகத்தில், ஒரு புளியமரத்தின் நிழலில் அவரை அடக்கம் செய்தனர்.

முடிவுரை:

இன்று நாம் சுரண்டை, பாவூர் மற்றும் சிவகாசி பகுதிகளில் காணும் ஒவ்வொரு தேவாலயத்தின் செங்கல்லிலும், பள்ளிக்கூடங்களிலும் ரெவரெண்ட் ஜான் தியோபிலஸ் பேரன்பூருக்கின் வியர்வையும், இரத்தமும் கலந்திருக்கிறது. தந்தை மாயவரத்தில் உழைத்து மரித்தார்; மகன் சிவகாசியில் தன் உயிரையே தியாகம் செய்தார்.

இந்த மாபெரும் தியாகியை, ரத்த சாட்சியை, திருநெல்வேலியின் ஆன்மீகச் சிற்பியை இன்று நன்றியோடு நினைவுகூருவோம். அவர் ஏற்றிய கல்வி மற்றும் ஆன்மீகத் தீபம், இந்தத் தென் தமிழக மண்ணில் என்றென்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்!

(என்றும் நன்றியுடன் – கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்.)
(நினைவு தினச் சிறப்புப் பதிவு)

ரிச்சர்ட் க்னில்லின் சேவை உலகிற்குத் தேவை!

--பேசும் பொம்மை ஷாந்தகுமார்--

ஆர்ப்பரிப்பு இல்லாத சிலருடைய வாழ்க்கையின் ஆழமான பதிவு நம்மிடம் பெரும் பூரிப்பை ஏற்படுத்துகிறது. அவர்கள் விதைத்த விதைகள் ஒன்றுக்கு நூறாய் பெருகி, காலம் கடந்தும் பல தலைமுறைகளை உலுக்கும் வல்லமை படைத்தவையாக மாறுகின்றன. அப்படிப்பட்ட அமைதியான வாழ்வின் மூலம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவர்களில் ஒருவரே ரிச்சர்ட் க்னில் (Richard Knill) ஆவார்.

ஆரம்பக்கால வாழ்வும் மாற்றமும்

ரிச்சர்ட் க்னில், 1787 ஏப்ரல் 14 அன்று இங்கிலாந்தின் டெவான் மாகாணத்திலுள்ள பிரான்டன் (Braunton) கிராமத்தில் பிறந்தார்.

இளமையில் மளிகைக் கடை வியாபாரியாகப் பயிற்சி பெற்ற அவர், ஒரு சாதாரண வாழ்க்கையை நோக்கியே பயணித்தார். ஆனால், அவரது இருபதுகளின் தொடக்கத்தில் ஏற்பட்ட ஓர் ஆழமான ஆன்மிக அனுபவம், அவரது வாழ்வின் திசையை முற்றிலும் புரட்டிப் போட்டது.

1812-ஆம் ஆண்டு ஆக்ஸ்மின்ஸ்டர் நகரிலுள்ள மேற்கு அகாடமியில் சேர்ந்தார். அங்கு டாக்டர் அலெக்சாண்டர் வாஹ் ஆற்றிய ஒரு பிரசங்கம் அவர் உள்ளத்தைத் தொட, தன்னை முழுமையாகச் சமயப் பணியில் இணைத்துக்கொண்டார்.

பின்னர், லண்டன் மிஷனரி சொசைட்டியால் (LMS) அங்கீகரிக்கப்பட்ட அவர், 1816 ஏப்ரல் 20 அன்று சக மிஷனரி சார்லஸ் மீட்டுடன் மதராஸ் (சென்னை) நோக்கிப் பயணமானார்.

'இறைவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; இறைவனுக்காகப் பெரிய காரியங்களை முயற்சி செய்யுங்கள்!'

இந்தியாவில் ஆற்றிய பணிகள் (1816–1819)

இந்திய மண்ணில் கால் பதித்த ரிச்சர்டுக்குப் பல சவால்கள் காத்திருந்தன. அறிமுகமில்லாத காலநிலை, மொழித் தடைகள், கலாச்சார வேறுபாடுகள் மற்றும் உடல்நல அபாயங்கள் என அனைத்தும் அவர் பணியைக் கடினமாக்கின. இருப்பினும் அவர் மனம் தளரவில்லை.

சுவிசேஷப் பிரசங்கம், கற்பித்தல் மற்றும் புதிய சமூகங்களை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார்.

கல்வியே சமூக மாற்றத்திற்கான முதன்மைக் கருவி என்று நம்பிய அவர், பள்ளிகளைத் தொடங்குவதிலும் கல்வியறிவை வளர்ப்பதிலும் தனி கவனம் செலுத்தினார்.

எனினும், கடுமையான வெயில் அவர் உடல்நலத்தைப் பாதித்தது. 1818-இல் உடல்நலம் தேறுவதற்காகத் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) நாகர்கோவிலுக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு சார்லஸ் மீட்டுடன் இணைந்து பணியாற்றிய அவர், 1819 புத்தாண்டு தினத்தன்று புகழ்பெற்ற நாகர்கோவில் ஹோம் சர்ச் (Home Church) ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் பாக்கியத்தைப் பெற்றார்.

துரதிர்ஷ்டவசமாக, காலரா நோயால் பாதிக்கப்பட்டதால் அதே ஆண்டு நவம்பரில் அவர் இங்கிலாந்து திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ரஷ்யாவில் நற்பணி (1820–1833)

மருத்துவர்களின் ஆலோசனைப்படி, குளிர்ச்சியான நாடான ரஷ்யாவிற்கு 1820-இல் சென்றார். முதலில் சைபீரியா செல்லத் திட்டமிட்டிருந்தாலும், சூழல் காரணமாகச் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரிலேயே தங்கிப் பணியாற்றினார்.

அங்கு இளவரசர் அலெக்சாண்டர் நிக்கோலாய்விச் கோலிட்சின் போன்ற செல்வாக்கு மிக்கவர்களின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது.

இதன் மூலம் ஜெர்மன், ஃபின்னிஷ், போலிஷ் உள்ளிட்ட பல மொழிகளில் வேதாகமத்தை அச்சிட்டு விநியோகிக்கும் பணியில் பெரும் பங்காற்றினார்.

மேலும், வெளிநாட்டுக் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியைத் தொடங்கியதோடு, கடற்படை வீரர்களுக்கும் ஆன்மிகப் பணி செய்தார்.

1823-இல் சாரா என்ற பெண்ணைத் திருமணம் செய்த இவருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தனர்.

இங்கிலாந்தில் புதுமையான ஊழியம் (1833–1857)

மீண்டும் இங்கிலாந்து திரும்பிய ரிச்சர்ட், பல இடங்களில் போதகராகப் பணியாற்றினார்.

குறிப்பாகச் சேஸ்டர் (Chester) நகரில் அவர் செய்த ஒரு முயற்சி அனைவரையும் வியக்க வைத்தது.

ஞாயிறு மாலைகளில் பொது அரங்குகளில் ஆராதனைகளை நடத்தினார். தேவாலயத்திற்கு வராத சாமானிய மக்களும் அங்கு வந்து உரைகளைக் கேட்கத் தொடங்கினர். இது அக்காலத்தில் ஒரு புரட்சிகரமான முயற்சியாகக் கருதப்பட்டது.

ஆளுமைகளை உருவாக்கிய சிற்பி

'சிறிய விதைகளிலிருந்துதான் ஆயிரக்கணக்கான மரங்களும் காடுகளும் உருவாகின்றன!'

சாதாரண இளைஞர்களை அசாதாரண ஆளுமைகளாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

ஆப்பிரிக்காவின் புகழ்பெற்ற மிஷனரி டேவிட் லிவிங்ஸ்டோன் சிறுவனாக இருந்தபோது, அவருடன் ஜெபித்து ஆப்பிரிக்கப் பணிக்காக அவரை ஊக்கப்படுத்தினார்.

1844-இல் கோல்செஸ்டரில் சார்லஸ் ஸ்பர்ஜன் என்ற சிறுவனைச் சந்தித்தார். 'இவன் ஒருநாள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நற்செய்தி அறிவிப்பான்' என்று அவர் கூறிய தீர்க்கதரிசனம் பலித்தது!

பிற்காலத்தில் ஸ்பர்ஜன் 'பிரசங்கிகளின் இளவரசர்' என்று போற்றப்பட்டார்.

ஆம்! விதையாய் விழுந்தார்!

விழுதாய் எழுந்தார்!

இறுதிப் பயணமும் தாக்கமும்

ரிச்சர்ட் ஒரு சிறந்த எழுத்தாளரும்கூட. அவர் எழுதிய துண்டுப் பிரசுரங்கள் கோடிக்கணக்கில் விநியோகிக்கப்பட்டன.

1857-இல் அவர் மறைந்தாலும், அவர் விதைத்த நற்பண்புகள் இன்றும் பலரின் வாழ்வில் பலன் கொடுத்து வருகின்றன.

ஒருவர் சொல்லும் சிறு ஊக்க வார்த்தை, ஒரு தலைமுறையின் எதிர்காலத்தையே மாற்றக்கூடும் என்பதற்கு ரிச்சர்ட் க்னில்லின் வாழ்க்கையே சாட்சி.

'பலரை நீதிக்குத் திருப்புகிறவர்கள் என்றென்றைக்கும் நட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள்.-தானியேல் 12:3

Christian Historical Society
CHRISTAVA VARALATRU SUVADUGAL
Membership Application Form
Monthly Research Journal
Preserving hidden, forgotten, and neglected pages of Christian history
Published continuously **every month since June 2020**
SCAN TO APPLY
This membership form can be
✓ Shared digitally ✓ Printed for submission
Contact Us
Christian Historical Library & Museum
Surandai – 627859, Tamil Nadu, India
+91 90420 15221

மன்னா செல்வகுமார்
கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்

வடதிருநெல்வேலி விடியலின் வரலாறு

ஆவுடையாள்புரம் திருச்சபை:

திருநெல்வேலி திருமண்டலத்தின் ஆன்மீக வரலாற்றில், சில திருச்சபைகள் மையமாகத் திகழ, பல அதன் கிளைகளாக வேரூன்றி வளர்ந்துள்ளன. சாயமலை விடிவெள்ளி ஆசிரமத்தின் வரலாறு என்பது ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் கதை மட்டுமல்ல, அது வடதிருநெல்வேலியின் சமூக, ஆன்மீக மறுமலர்ச்சிக்கான ஒரு மாபெரும் தேடலின் வெளிப்பாடு. இந்த வரலாற்றுப் பயணத்தின் தொடக்கப் புள்ளிகளில், அருள்திரு. எஸ். பால் மாணிக்கம் எழுதிய 'விடிவெள்ளி ஆச்சிரமம்' என்ற நூலின் வாயிலாக, ஆவுடையாள்புரம் கிராமம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. விடிவெள்ளி ஆசிரமம் தோன்றுவதற்கு அடித்தளமிட்ட முன்னோடி ஊழியத்தின் களங்களில் ஒன்றாக ஆவுடையாள்புரம் திகழ்ந்தது, அதன் வரலாற்றுப் பெருமைக்குச் சான்றாகும்.

வரலாற்றுப் பின்னணி: நற்செய்தி பரவாத வடதிருநெல்வேலி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், வடதிருநெல்வேலிப் பகுதி நற்செய்தியின் ஒளி பரவாத, கடினமான ஊழியக் களமாகவே விளங்கியது. முறையான சாலைகள் அற்ற, காட்டுப்பாதைகள் மட்டுமே நிறைந்த அப்பகுதியில், சமூக, கல்வி வளர்ச்சியும் பின்தங்கியே இருந்தது. இந்தச் சவாலான சூழலில்தான், திருநெல்வேலி திருமண்டலம் இப்பகுதியில் ஒரு புதிய மிஷனரி ஊழியத்தைத் தொடங்கத் திட்டமிட்டது. இந்த முயற்சிக்குத் தலைமை தாங்க, 1927-ஆம் ஆண்டில், 'தேசாந்திரப் பிரசங்கமார் குழுவின்' தலைவராக அருள்திரு. எஸ். சி. நீல் ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

முன்னோடியின் வருகை: ஆவுடையாள்புரத்தில் அருள்திரு. எஸ். சி. நீல்

சிறந்த கல்வியாளரான அருள்திரு. எஸ். சி. நீல், வெறும் பிரசங்க ஊழியராக மட்டுமின்றி, மக்களோடு தங்கி அவர்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து ஊழியம் செய்யும் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடித்தார். 1927 முதல் 1930 வரையிலான காலகட்டத்தில், அவர் வடதிருநெல்வேலியின் பல கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்தார். 'விடிவெள்ளி ஆச்சிரமம்' நூல் குறிப்பிடுவதன்படி, அவர் ஊழியம் செய்த முக்கிய கிராமங்களின் பட்டியலில் ஆவுடையாள்புரமும் இடம்பெறுகிறது.

'அவர்கள் தங்கி வேலை செய்த கிராமங்கள்: தேவர்குளம், மூவரிருந்தாளி, பனைவடலி, அச்சம்பட்டி, சாயமலை, ஆவுடையாபுரம் முதலியவை. கிராமங்களில் வசதிக் குறைவுகளிருந்தாலும், கனம் நீல் ஐயரவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது மகிழ்ச்சியுடன் சேவை புரிந்தனர்.'

இந்த வரிகள், ஆவுடையாள்புரத்தின் ஆரம்பகால கிறிஸ்தவ வரலாற்றுக்கு ஒரு அழியாத சான்றாக அமைகின்றன. அருள்திரு. நீல் அவர்கள், மாதத்தில் சுமார் 20 நாட்கள் வரை இக்கிராமங்களில் தங்கியிருந்து, மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, அவர்களின் எளிய வாழ்வோடு தன்னையும் இணைத்துக்கொண்டார்.

ஆரம்பகால திருச்சபை வாழ்க்கை

அக்காலத்தில் ஆவுடையாள்புரத்தில் ஒரு நிலையான ஆலயம் இருந்திருக்க வாய்ப்பில்லை. அருள்திரு. நீல் மற்றும் அவருடன் வந்த ஊழியர்களின் வருகையே அங்குள்ள மக்களுக்கு ஒரு புதிய ஆன்மீக அனுபவமாக இருந்திருக்கும். தெருமுனைக் கூட்டங்கள், வீடுகளில் நடைபெறும் ஜெபங்கள், மரத்தடியில் கூடி வேதபாடங்களைக் கேட்பது போன்றே ஆரம்பகால திருச்சபைக் கூட்டங்கள் அமைந்திருக்கக்கூடும். வசதிக்குறைவுகளைப் பொருட்படுத்தாமல், ஊழியர்கள் மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்ததாக நூல் குறிப்பிடுவதைக் கொண்டு, ஆவுடையாள்புரம் மக்கள் நற்செய்தியை ஏற்றுக்கொள்வதிலும், ஊழியர்களுக்கு ஆதரவளிப்பதிலும் ஆர்வம் காட்டியிருக்கலாம் என நாம் யூகிக்க முடிகிறது.

விடிவெள்ளி இயக்கத்துடனான தொடர்பு

அருள்திரு. எஸ். சி. நீல் அவர்களின் இந்த முன்னோடி ஊழியமே, பிற்காலத்தில் சாயமலையில் விடிவெள்ளி ஆசிரமம் நிறுவப்பட முக்கிய உந்துதலாக அமைந்தது. சாயமலை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான தேவர்குளம், அச்சம்பட்டி, ஆவுடையாள்புரம் போன்றவற்றில் அவர் தங்கி ஊழியம் செய்த அனுபவமே, இப்பகுதியில் ஒரு நிலையான மிஷனரி மையம் தேவை என்ற எண்ணத்தை அவருக்குள் ஏற்படுத்தியது. அதன் விளைவாகவே, 1932-இல் குமாரி மியூரியல் பிராஸ்ட் மற்றும் குமாரி ஜாய் சாலொமோன் ஆகியோரால் சாயமலையில் விடிவெள்ளி ஆசிரமம் நிறுவப்பட்டது.

ஆகவே, ஆவுடையாள்புரத்தில் விதைக்கப்பட்ட விசுவாச விதை, விடிவெள்ளி ஆசிரமம் என்ற மாபெரும் விருட்சம் உருவாகத் துணைநின்றிருக்கிறது என்பது தெளிவு. ஆசிரமத்தின் வரலாற்றை ஆவுடையாள்புரத்தின் பங்களிப்பிலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது.

'விடிவெள்ளி ஆச்சிரமம்' நூலில் ஒற்றைப் பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆவுடையாள்புரம் கிராமத்தின் வரலாற்று முக்கியத்துவம் மிகப்பெரியது. அது, வடதிருநெல்வேலியின் கடினமான ஊழியக்களத்தில், தியாக மனப்பான்மையுடன் ஊழியம் செய்த ஒரு மாபெரும் மிஷனரியின் கால்தடம் பதிந்த மண். விடிவெள்ளி ஆசிரமம் என்ற ஆன்மிக மறுமலர்ச்சி இயக்கத்தின் தாய்மடியாக இருந்த கிராமங்களில் ஆவுடையாள்புரமும் ஒன்று. அதன் வரலாறு, சிறிய ஆரம்பங்களைக் கொண்டு இறைவன் பெரிய காரியங்களைச் செய்வான் என்பதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இன்று, திருநெல்வேலி திருமண்டலத்தின் ஒரு திருச்சபையாக அது வளர்ந்து நின்றாலும், அதன் ஆணிவேர் தியாகத்திலும், அர்ப்பணிப்பிலும், ஒரு முன்னோடியின் ஜெபத்திலும் உள்ளது என்பதே அதன் பெருமைக்குரிய வரலாறு.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

பெரிய வெள்ளி அன்று –ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம்

மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக ஒருங்கிணைந்த திருநெல்வேலி பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு சென்னையில் உள்ள பாடி பகுதியில் உள்ள பல்வேறு சபைகளில் உள்ள இளையோர் திருச்சபையினர் தமிழகம் முழுவதும் உள்ள மிஷன் நிலையங்களை குறிப்பாக தரங்கம்பாடி, தஞ்சாவூர், மதுரை வழியாக திருநெல்வேலிக்கு சுமார் 20 பேர் வந்திருந்தனர். அவர்களை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் அனைவரையும் வரவேற்று திருநேல்வேலி பகுதியில் சுற்றுப்பயணம் ஆரம்பமானது.

முதலாவதாக நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். குறிப்பாக சாயர்புரம் உருவாக காரணமாக இருந்த சாமுவேல் சாயர் அவர்கள் நினைவிடம் பார்த்தோம். பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர். சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும் அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம்.

நெல்லை அப்போஸ்தலர் கனம் ரேனியஸ் நினைவிடம்

அப்போஸ்தலர் கிறித்தவ சமயப் பணியுடன் தமிழ் இலக்கியப் பங்களிப்பும் செய்தவர். சாதீயப் பாகுபாடுகளைப் போக்கி சமத்துவக் குடியிருப்புகளை உருவாக்கியதுடன் பெண்கள் கல்விக்கு முன்னின்று பள்ளிகளைத் தொடங்கியவர். சமூகத்திற்கு உதவும் பல சங்கங்களைத் தோற்றுவித்த ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். 371 சபைகளையும் 127 பள்ளிகளையும் உருவாக்கியவ வரலாற்றை தெரிந்து கொண்டோம். பின்னர் பரி திருத்துவ பேராலயம் சென்றோம் ஊசி கோபுர வரலாற்றையும் CMS முதல் மிஷனெரி இயக்கத்தையும் அதன் பணிகளையும் பின்னணிகளையும் தெரிந்து கொண்டோம்.

பின்னர் நாசரேத் சென்றோம். யோவான் பேராலய வளாகத்தில் சேகர பொருளாளர் லேவி அசோக் சுந்தர்ராஜ் வரவேற்றார். ஓய்வு பெற்ற ஆசிரியர் லூயிஸ் ஜான் ஸ்டீபன், பேராலயத்தின் வரலாறு மற்றும் அதன் சிறப்புகள் குறித்தும், மார்காஷிஸ் மிஷனெரி பணிகள் மற்றும் அவருக்கு முன்னர் பணியாற்றிய மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறு குறித்தும் எடுத்துரைத்தார். கனம். மார்காஷிஸ் வாழ்விடம் குறித்தும், மார்காஷிஸ் மேல்நிலைப் பள்ளியின்

வரலாறு குறித்தும், இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ் விளக்கிக் கூறினார். வருகை தந்த அனைவரும், மார்காஷிஸ் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். அதன் பின்னர் கனம். ஆர்தர் மார்காஷிஸ் வாழ்ந்த பங்களாவை பார்வையிட்டனர். வருகை புரிந்த அனைவருக்கும், நாசரேத் தேவாலயம் குறித்த வரலாற்று புத்தகம் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து நாசரேத் திருமறையூரில் 1900 ம் வருடம் கனம் மார்காஷியஸ் ஐயரவர்கள் 8 மாணவர்களுடன் நாசரேத் இறையியல் கல்லூரியை (Nazareth Theological Seminary) ஆரம்பித்தார்கள். பின்னர் 1910ம் வருடம் கனம் C. W. வெஸ்டன் ஐயரவர்களின் காலத்தில் கல்லூரி புதிய வடிவத்தை பெற்றது. நாசரேத் இறையியல் கல்லூரி என்ற பெயரில் இருந்து பிஷப் இறையியல் கல்லூரி (Bishop Theological Seminary) என்ற புதிய பெயரை பெற்றது. அந்த இடத்தில் தற்பொழுது பேராயர் நீல் பங்களாவும் புரனமைப்பு பணிகள் முடிந்துவிட்டது என்பதை நேரில் பார்த்தோம் மிக அருமையாக இருந்தது. அங்கு அருள்திரு. H. ஜான் சாமுவேல் ஐயரவர்கள் எங்களை வரவேற்று மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தார்கள். குருவானவர் வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள். வருகை புரிந்த அனைவருக்கும், அருள்திரு. H. ஜான் சாமுவேல் எழுதிய தடையங்கள் நூல் மற்றும் தே அ கிறிஸ்துதாஸ் கனம் மார்காஷியஸ் ஐயரவர்கள் வரலாற்று நூல் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

பின்பு தென் நெல்லை அப்போஸ்தலர் கனம் ஜாண் தோமாஸ் அவர்கள் செய்த பணிகளையும் நினைவிடத்தையும் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஜாண் தோமாஸ் மியூசியம் சென்று பார்த்தோம். அங்கு நடைபெறும் உலக புகழ் பெற்ற அசனம் குறித்து விரிவாக ஆய்வு செய்தோம்.

பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டலமான திருநெல்வேலியின் முதல் குடியிருப்பு கிராமமான முதலூரில் தூய மிகாவேல் முதலான சகல சம்மனசுகளின் ஆலயம் சென்றோம். முதலூர் சேகர குருவானவர் அருட்திரு. K. செல்வன் மகாராஜா அவர்கள் சபை வரலாற்றை பகிர்ந்து கொண்டார். திரு. சாந்தராஜா ஆசிரியர் அவர்கள் எங்களை வரவேற்றார். அங்கு சுவிசேஷகர் தாவீது சுந்தரானந்தன் மற்றும் Rev. H. B. நார்மன் அவர்களின் பணிகளை தெரிந்து கொண்டோம். வந்திருந்த அனைவருக்கும் தேநீர் மற்றும் அனைத்து உதவிகளையும் செய்து இருந்தார்கள்.

பின்னர் அங்கிருந்து திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடமான இடையன்குடி சென்றோம். அங்கு பேராயர் கால்டுவெல் நினைவிடத்தையும் எலைசா கால்டுவெல் செய்த பணிகளையும் தெரிந்துகொண்டோம். தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூல் மற்றும் அவர் எழுதிய 'திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறுகள், சங்க இலக்கியங்கள், அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார், என்ற வரலாற்றை தெரிந்து கொண்டோம். குறிப்பாக ஆலய கோபுரத்தில் உள்ள 'ஜாய் பெல்' சுற்றி பார்த்தோம் அதன் வரலாற்றை தெரிந்து கொண்டோம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் சங்க பணிகளை வந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மன்னா செல்வக்குமார் வரலாற்றை பகிர்ந்து கொண்டு அனைவருக்கு நன்றி தெரிவித்தார். இந்த மிஷன் வரலாற்றுச் பயணத்திற்கு அனைத்து வகையிலும் உதவி செய்த ஜெபித்த அனைவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரலாற்று நூல் வெளியீடு!



கொல்கத்தா பிஷப் கல்லூரியில் 'இந்தியாவில் மதவாதமும் கந்தமால் கிறிஸ்தவர்களின் அனுபவமும்'

கொல்கத்தா (மார்ச் 14, 2026):

இந்திய கிறிஸ்தவ வரலாற்றில் மறக்க முடியாத மற்றும் வலிகள் நிறைந்த பக்கங்களான ஒடிசா மாநிலம், கந்தமால் கிறிஸ்தவர்களின் தியாகங்களையும், விசுவாசப் போராட்டத்தையும் ஆவணப்படுத்தும் மிக முக்கியமான வரலாற்று நூல் கொல்கத்தாவில் உள்ள புகழ்பெற்ற பிஷப்ஸ் கல்லூரியில் (Bishop's College) கோலாகலமாக வெளியிடப்பட்டது.

'Religious Communalism in India: A Kandhamal Christian Experience' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இந்த ஆங்கில நூலை, அருள்திரு. முனைவர் D. ஐசக் தேவதாஸ் (Rev. Dr. D. Isaac Devadoss) அவர்கள் எழுதியுள்ளார். நமது கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் (Christian Historical Society) பெருமையுடன் இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் 14, 2026 அன்று பிஷப்ஸ் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்பு வெளியீட்டு விழாவில், கிறிஸ்தவ தலைவர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் இறையியல் அறிஞர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள்:

- **நூல் அறிமுகம்:** கொல்கத்தா பிஷப்ஸ் கல்லூரியின் முதல்வர் அருள்திரு. முனைவர் சுனில் எம். காலேப் (Rev. Dr. Sunil M. Caleb) அவர்கள் இந்த நூலின் நோக்கத்தையும், இதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.
- **நூல் வெளியீடு:** ஜெர்மனியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் உலக சீர்திருத்த சபைகளின் கூட்டமைப்பின் (WCRC) பொதுச் செயலாளர் அருள்திரு. பிலிப் வி. பீகாக் (Rev. Philip V. Peacock) அவர்கள் சிறப்பு

விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த வரலாற்று நூலை வெளியிட்டார்.

• நூல் பெறுதல்: வெளியிடப்பட்ட நூலின் முதல் படியை, துர்காபூர் (CNI) திருமண்டலத்தின் பேராயர் பேரருள்திரு. சமீர் கிம்லா (Rt. Rev. Sameer Khimla) அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நூலின் சிறப்பு அம்சங்கள்:

தென்னாப்பிரிக்காவின் குவாசுலு-நதால் (KwaZulu-Natal) பல்கலைக்கழகத்தில் நூலாசிரியர் ஐசக் தேவதாஸ் மேற்கொண்ட முனைவர் பட்ட (Ph.D) ஆய்வின் அடிப்படையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1980-களில் தொடங்கி குறிப்பாக 2007 மற்றும் 2008-ஆம் ஆண்டுகளில் ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட மதவாத வன்முறைகளை இந்நூல் மிகத் துல்லியமாக ஆவணப்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் காலனித்துவ ஆதிக்கத்தின் பின்னணி, இந்துத்துவ தேசியவாதத்தின் எழுச்சி, பனா (Panas) மற்றும் கோண்ட் (Konds) பழங்குடியின கிறிஸ்தவர்களின் சமூகப் பொருளாதார நிலை என அனைத்தையும் நடுநிலையோடு அலசுகிறது இந்தப் புத்தகம்.

சுவாமி லட்சுமணானந்தா சரஸ்வதியின் மரணத்தைத் தொடர்ந்து, நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டதும், 395 தேவாலயங்கள் மற்றும் 8400-க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து கந்தமால் கிறிஸ்தவர்கள் காட்டிய அசைக்க முடியாத விசுவாசமும் (Martyrdom) இந்நூலில் நேர்காணல்கள் (Oral History) வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தென்னாப்பிரிக்கப் பேராசிரியர் பிலிப் டெனிஸ் (Philippe Denis) மற்றும் பிரபல பத்திரிகையாளர் அன்டோ அக்காரா (Anto Akkara) ஆகியோர் இந்நூலுக்குச் சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ளனர்.

இந்தியச் சூழலில் கிறிஸ்தவ விசுவாசமும், அதற்கான விலைக் கிரயமும் எத்தகையது என்பதை இன்றைய தலைமுறையினருக்கும், எதிர்கால வரலாற்று மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் அரிய பொக்கிஷமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

நமது கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் எடுத்திருக்கும் இந்த உயரிய முன்னெடுப்பு, இந்திய தேவாலய வரலாற்றில் ஒரு மிக முக்கிய மைல்கல்லாகும். 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' வாசகர்கள் அனைவரும் வாசித்துப் பாதுகாக்க வேண்டிய வரலாற்று ஆவணம் இந்த நூல்.

நூலகத்தில் சந்திப்பு

Yearly Subscription

600

christianhistoricalsociety.in

Apply Now

Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Circulation Only

To

CHRISTAVA VARALATRU SUVADUGAL
2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Education- For Private Circulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401